# வருடாந்த செயற்பாட்டு அறிக்கையும் கணக்கும் 2016

# பொருளடக்கம்


| | | பக்க இல |
|---|---|---|
| மதிப்பாய்வுரை | | 1-2 |
| 01.திணைக்கள நடவடிக்கைகளும் அதன் செயலாக்கமும் | | 3-6 |
| .02 | பதிவு செய்யும் செயல்முறை | 7-13 |
| 2.1 | ஓய்வூதியத்தைப் பதிவுசெய்யும் செயல் முறை | 7 |
| 2.2 | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தில் பதிவுசெய்தல். | 9 |
| 2.2.1 | விதவைகள்மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பதிவுசெய்தல். | 11 |
| 2.3 | பொதுச் சேவை நம்பிக்கை நிதியத்தில் பதிவு செய்தல் | 12 |
| 03. | முதல் கொடுப்பனவுச் செயல் முறை | 14-21 |
| 3.1 | “சத்கார பியச” | 14 |
| 3.2 | முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 15 |
| 3.3 | விதவைகள் அனாதைகள் தபுதாரர்கள் ஓய்வூதிய முதல் கொடுப்பனவு செயன் முறை. | 18 |
| 3.3.1 | விதவைகள் மற்றும் தபுதாரர்களுக்கான முதற் கொடுப்பனவு. | 19 |
| 3.3.2 | அனாதைகள் முதற் கொடுப்பனவு | 19 |
| 3.3.3 | ஊனமுற்றோருக்கான முதல் ஓய்வூதியக் கொடுப்பனவு. | 20 |
| 3.3.4 | மறுமணம் செய்த துணைக்கான கொடுப்பனவு. | 21 |
| 04. | மாதாந்த கொடுப்பனவுச் செயன் முறை | 22-27 |
| 4.1 | பங்களிப்புகளில் பயனாளிகளிற்கான நன்மைக் கொடுப்பனவுகள் | 22 |

| | | | |
|---|---|---|---|
| | 4.1.1 | விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் மீள்கொடுப்பனவு | 22 |
| | 4.1.2 | பொதுச் சேவைநம்பிக்கைநிதியநன்மைக் கொடுப்பனவு | 24 |
| | 4.2 | வழங்கவேண்டியஅரசாங்ககொடையளிப்புக்களைக் கையாளல். | 25 |
| 05. | வெளிநாட்டுஓய்வூதியக் கொடுப்பனவைக்கையாள்தல் | | 28-29 |
| 06. | திரட்டிய நிதி உட்பாய்ச்சல் | | 30-33 |
| | 6.1 | விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியைக் கையாளுதல். | 30 |
| | 6.2 | பொதுச்சேவைப் நம்பிக்கை நிதியப் பங்களிப்பைக் கையாள்தல். | 31 |
| | 6.3 | கட்டட வாடகையைக் கையாள்தல் | 31 |
| | 6.4 | ஓய்வூதிய விடுதியின் மூலமான வருவாய் | 32 |
| 07. | உள்ளகக் கணக்காய்வு | | 34-35 |
| 08. | கொள்கை முடிவுகளைப் புதுப்பித்தல் | | 36-37 |
| 09. | ஓய்வூதியர்கள் பெறும் ஏனைய நனமைகள் | | 38-46 |
| | 9.1 | திணைக்களப் பயிற்சி நெறிகள் | 38 |
| | 9.2 | கடன் வசதிகள் வழங்கல் | 39 |
| | 9.3 | இயங்கலையில் புகையிரத ஆணைச்சீட்டு ஒதுக்கீடு | 40 |
| | 9.4 | அக்றஹார | 41 |
| | 9.5 | தனியார் நிறுவனங்களை இணைத்தல் | 42 |
| | 9.6 | ரம்பொட மற்றும் களனி ஓய்வு விடுளை நவீனமயமாக்கல். | 43 |
| | 9.7 | ஓய்வூதிய இணைய சஞ்சிகை. | 45 |

| | | |
|---|---|---|
| | 9.8 ஓய்வூதியர்களுக்கான வானொலி சேவை | 45 |
| 10. | மனித வள முகாமைத்துவம் | 47-51 |
| | 10.1 உள்ளகப் பயிற்சி நெறிகள் | 47 |
| | 10.2 வெளிநாட்டு பயிற்சி நெறிகளை முகாமைத்துவப்படுத்தல் | 49 |
| | 10.3 புத்தாண்டு விழா | 50 |
| 11. | தேசிய ஓய்வூதியர் தினம் | 52-53 |
| 12. | உற்பத்தி திறன் | 54-55 |
| 13. | நிதிமீளாய்வு | 56-62 |
| | 13.1 ஓய்வூதிப் பணிக்கொடைக் கொடுப்பனவு | 57 |
| | 13.2 மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு. | 59 |
| | 13.3 கொடுப்பனவு சுருக்கம் | 61 |
| 14. | ஒதுக்கீட்டுக் கணக்கு | 65-78 |

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

## நோக்கு

*பொருளாதார மற்றும் சமூக ரீதியில் திருப்தி மிக்கதோர் ஓய்வூதியர் சமுதாயம்*

## செயற்பணி

*அரச சேவையில் ஓய்வூதியர்களுக்கும் அவர்களின் பயனாளிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் அரச துறையினர் உள்ளடங்கிய சேவைபெறுநர்களினதும் சேவைவழங்குநர்களினதும் திருப்தியை உயர் மட்டத்தில் உறுதிப்படுத்தி, சட்ட ரீதியான நலன்களை வழங்குதல்.*

## ஓய்வூதியத் திணைக்களம் - அங்கீகாரம் பெற்ற ஆளணி

| பதவியின் தன்மை | பதவி | பொருந்தக்கூடிய சேவை | ஊதியக் கட்டமைப்பு | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி எண்ணிக்கை | சேவையில் ஆளணி எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|
| உயர் நிலை | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (Special) | SL 3 | 01 | 01 | 00 |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS (Class I) | SL 1 | 03 | 02 | 01 |
| | பிரதம கணக்காளர் | SLAcS(Class I) | SL 1 | 01 | 01 | 00 |
| | பிரதி/உதவிப் பணிப்பாளர் | SLAS (Class II or III) | SL 3 | 07 | 09 | 00 |
| | கணக்காளர் | SLAcS(Class II or III) | SL 4 | 09 | 08 | 01 |
| | தொ.ப/உ.ப | SLICT Service II/ III | SL 5 | 01 | 00 | 01 |
| | சட்ட அலுவலர் | Dept | SL 6 | 01 | 00 | 01 |
| மூன்றாம் நிலை | நிர்வாக அலுவலர் | PMAS (Supra) | MN 7 | 04 | 01 | 03 |
| | மொழிபெயர்ப்பாளர் | TS | MN 6 | 02 | 02 | 00 |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLICT Service | MN 6 | 05 | 02 | 03 |
| இரண்டாம் நிலை | பாதீட்டு உதவியாளர் | Related Service | MN 4 | 01 | 01 | 00 |
| | ஓய்வூதி அலுவலர் | Related Service | MN 4 | 340 | 300 | 40 |
| | தொழில்நுட்ப அலுவலர் | SLTS | MN 3 | 01 | 00 | 01 |
| | முகாமைத்துவ உதவியாளர் | PMAS | MN 2 | 190 | 110 | 80 |
| | த. தொ.தொ உதவியாளர் | SLICT Service | MT 1 | 05 | 01 | 04 |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | D/O | MN 4 | 398 | 365 | 33 |
| | ஆவண உதவியாளர் | Dept | MN 1 | 141 | 130 | 11 |
| முதன்மை நிலை | விடுதிக் காப்பாளர் | Dept | PL 1 | 02 | 02 | 00 |
| | சமயற்காரர் / தோட்டக்காரர் | Dept | PL 2 | 04 | 04 | 00 |
| | சாரதி | D/S | PL 3 | 12 | 08 | 04 |
| | அலுவலக உதவியாளர் | KKS | PL 1 | 56 | 37 | 13 |
| | மின்சாரப் பராமரிப்பாளர் | Dept | PL 3 | 01 | 00 | 01 |
| **மொத்தம்** | | | | **1186** | **991** | **197** |

## நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம்




ஒஅ –ஒய்வூதிய அலுவலர்
பா.உ- பாதீட்டு உதவியாளர்
அ.உ-அபிவிருத்தி உதவியாளர்

அ.உத்- அபிவிருத்தி அலுவலர்
பொமுஉ- பொது முகாமைத்துவ உதவியாளர்
தகொஉ - தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்

வி.கா - விடுதிக் காப்பாளர்
அஊசே - அலுவலக ஊழியர் சேவை
சா- சாரதி

## மதிப்பாய்வுரை

1934 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிய உருவாக்கப்பட்ட ஓய்வூதியப் பிரமாணத்தில் அவ்வப்போது திருத்தங்கள் மெற்கொள்ளப்பட்டு, 1972 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி திருத்தப்பட்ட ஓய்வூதிய பிரமாணம் ஆகியவற்றின் பிரகாரம் ஓய்வூதிய வழங்கல் இலங்கை அரச சட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றங்கண்டுள்ளது. 1898 ஆம் இலக்க 01 இனால் அறிமுகப்படுத்தப்பட்ட விதவை, தபுதாரர், அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் 1983 இல் ஓய்வூதிய கட்டளைச் சட்டமாக 1981 இல் 44 ஆம் இலக்க விதவை, அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் நிதியச் சட்டமாக உருவாக்கப்பட்டதுடன் விதவை, தபுதாரர், அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் ஆகிவை அடங்கலாக அனைத் திருத்தங்களுடனும் 2010 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க சட்டமாக உருவாக்கப்பட்டது.

மெலும் 1942 ஆம் இலக்க 18 ஆம் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக பொதுச் செவைகள் சேமலாப நிதியத்தின் சட்டபூர்வமாக செயற்படுத்தப் படுகின்ற மூன்று விடயங்களில் பயனாளிகள் தொடர்பான கட்டணச் செயன்முறையைக் கையாள்வது ஓய்வூதிய திணைக்களத்தின் முதன்மைப் பொறுப்பாகும்.

பொது நிர்வாக அமைச்சின் கீழ் ஓய்வூதிய திணைக்களம் “அ” தர நிறுவனமாக 1970.12.23 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் முடிவில் ஏறத்தாழ ஐந்து இலட்சத்து எழுபத்தையாயிரம் (5,75,000) ஓய்வூதியர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார நிலையில் திருப்தியுறும் வகையில் சேவையை வழங்கும் மிகப பாரிய பணியை மேற்கொண்டது. விசேடமாக

விதவைகள், தபுதாரர், அனாதைகள் , அமைச்சுசார் அலுவலர்கள், அராசால் நியமிக்கப்பட்ட நிரந்தர, அமய,பிரதியீட்டு மற்றும் தகுதிகாண் நிலை முப்படை அலுவலர்கள் மற்றும் பொதுச் சவை நம்பிக்கை நிதிய அங்கத்தவர்கள் என 12 இலட்சம் அங்கத்தவர்களிடையே தொடர்ந்தும் இணைப்புப் பேணப்பட்டு வருகிறது.

2016 ஆண்டில் ஓய்வூதிய சமுதாயத்தின் நம்பிக்கையை வென்றெடுத்ததுடன் ஓய்வூதிய சமுதாயத்திற்கும் அவர்களது குடும்பங்களிற்கும் வழங்கும் தரமான குறிப்பிடத்தக்க சேவை தொடர்பில் தேசிய அளவில் வேறுபட்ட மதிப்பீடுகள் மற்றும் பாராட்டுக்கள் பெறப்பட்டன. ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நவீன தொழில் நுட்பத்துாடாக இவ்விலைமதிப்பற்ற வெற்றியை திணைக்களம் பெற்றுள்ளது.

மேலும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் ஓய்வூதியத் திணைக்களம் ஓய்வூதியர்களிற்கு, தள்ளுபடியுடனான பொருட்கள் சேவைகளை வழங்கல், கடன் வசதிகளை வழங்கல்,

பொருளாதார சுய வேலை வாய்ப்பு வழங்குதல் போன்றவை தொடர்பிலான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தனியார் துறைப் பங்களிப்பை உயர்த்தியுள்ளதுடன் ஓய்வூதியர் சமுதாயத்திற்கான் உறுதியான பொருளாதார வாழ்விற்கு வழிவகையைச் செய்துள்ளது.

அதே வேளை, ஓய்வூதியர் சமுதாயம் மற்றும் திணைக்களத்தில் பணியாற்றுவோர் ஆகியோருக்கான பயனுள்ள சூழலை உருவாக்கும் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் திணைக்களத்தில் குறிப்பிடத்தக்க நிறுவனவளர்ச்சி மற்றும் பௌதீக வளர்ச்சி அகியவை முன்னெடுக்கப்பட்டதுடன் ஓய்வூதியம் வழங்கலுக்கு அப்பாலான சேவையாக ஓய்வூதியர்களிற்கும் அவர்களது குடும்பங்களிற்கும் ஓய்வு விடுதிகளைத் தரமுயர்த்தி அவ்வசதிகளை பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், ஓய்வூதியத் திணைக்களத்தில் கடமையாற்றும் திணைக்கள அலுவலர்களிற்கு அவர்களது சிறந்த சேவையை பெறும் பொருட்டு மனிதவள பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் திணைக்கள அலுவலர்கள மற்றும் அனுசரணையாளர்களாக இருக்கும் ஏனைய அரச அலுவலர்களுக்கு பழைய ஓய்வூதியம் வழங்கற் செயன்முறையில் இருந்து வெளிவருதலுக்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

## 01. திணைக்கள நடவடிக்கைகளும் அதன் செயலாக்கமும்

ஓய்வூதிய திணைக்களத்தின் செயற்பாடுகளில் ஓய்வூதியக் கொடுப்பனவு செய்முறை மற்றும் தொடர்புடைய துணை செயல்முறைகள் 2016 ஆம் ஆண்டு மறுவடிவத்தைப் பெற்றுள்ளன. நவீன தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளைக் கொண்ட புரட்சிகர செயல் முறையினூடாக பாரம்பரியமான பொது சேவைக்கு அப்பால் வளர்ச்சி நடைபெற்றுள்ளது.

ஓய்வூதிய திணைக்களத்தின் தகவல் தொழில் நுட்பப் பிரிவு நாள் தோறும் நவீன தொழில்நுட்ப செயற்பாடுளை முன்னெடுப்பதற்கு முன்னர் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் பயிலுனர்களுக்கான உள்ளகப் பயிற்சிகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் அகியோரின் பங்களிப்புடன் அவர்களின் பணிச்சூழலைப் புதுப்பித்தற் செயன்முறையை முன்னெடுப்பது திருப்பு முனையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓய்வூதிய முகாமைத்து தொகுதியின் கீழ் முதல் கட்டமாக அரசாங்க ஊழியர்களின் விதவை, தபுதாரர், அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியத்தைப் பதிவுசெய்வதற்கான மென்பொருள் ஒன்றை உருவாக்குதல் ஒரு தீர்வாகும். நாடு முழுவதிலுமாக இயங்கலையில் (online) இணைந்துள்ள நான்காயிரத்திற்கும் அதிகமான அரசாங்க நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவற்றை பதிவு செய்யும் நடவடிக்கை மேறகொள்ளப்பட்டதுடன் 2016.12.31 ஆம் திகதிவரை 2121 அரசாங்க நிறுவனங்களில் உள்ள 3260 பயனாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 29613 அரசாங்க ஊழியர்கள் விதவை, தபுதாரர், அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியத்திற்காக இயங்கலையில் பதிவுசெய்தற் பொருட்டு விண்ணப்பித்துள்ளனர் அத்துடன் 2016.12.31 ஆம் திகதி வரை 25106 அரசாங்க ஊழியர்கள் இச்செயன் முறையின் ஊடாக ஏற்கனவே பதிவு செய்துள்ளனர். மேலதிகமாக, ஓய்வூதியம் பெறும் தகுதி வாய்ந்த நபர்களின் முழுமையான தரவு முறைமையை மேம்படுத்துவதற்கு மேலேயுள்ள நடவடிக்கை தவிர, விதவை, தபுதாரர், அனாதை மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதிய உரிமத்தை மீண்டும் பதிவு செய்வதற்கான தகவல் தொழில்நுட்பத் நிகழ்ச்சித் திட்டம் தயாரித்து நடைமுறைபடுத்தப்படுகிறது.

தபால் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் செலவீனங்களைக் குறைக்கு முகமாகவும் தபால் நிலையத்தில் இருந்து ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான வழிமுறையை எளிதாக்கு முகமாகவும் ஒருங்கிணைந்த இயங்கலை

(online) கட்டண முறையானது உருவாக்கப்பட்டது.

அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் செயல் முறை மத்திய தரவுத் தளத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அனைத்துக் கொடுப்பனவுகளும் பிதேச வங்கிகள் மற்றும் அஞ்சல் அலுவலகங்கள் மூலம் அனைத்து பிரதேச செயலகங்களூடாக பன்முகப்படத்தப்பட்டு, காசோலையாக வழங்கப்பட்டது. மேலும் செலவுகள் மற்றும் நிர்வாக சிரமங்களைக் குறைக்கும் நோக்குடன் இயங்கலைக் (online) கொடுப்பனவு முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் மையப்படுத்தப்பட்ட மத்திய தரவுத்தளச் செயன்முறையின் ஊடாகக் இலகுவான நிர்வாக வழிமுறைகளால் தபால் கொடுப்பனவுகளை செலுத்தவதுடன் அரசாங்கத்திற்கு ஏறத்தாள ரூபா 500,000.00 சேமிக்க முடிந்துள்ளது.

ஓய்வூதிய முகாமைத்துவ அமைப்பின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2016.10.08 ஆம் திகதி ஓய்வூதிய உரிமைகளை இயங்கலையில் (online) பதிவுசெய்தல் பொது நிர்வாக அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற தேசிய ஓய்வூதிய தின விழாவில் தொடங்கிவைக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற அரச அலுவலர்களின் ஓய்வூதியப் பதிவுகள் இயங்கலையில் மேற்கொள்ளப்பட்டதுடன் ஓய்வூதிய விவரங்கள் தொடர்பில் ஓய்வூதியருடன் தொடர்பு கொள்தற்பொருட்டு இலவசமாக ஒருங்கிணைந்த குறுந்தகவல் சேவையும் டயலொக் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

ஓய்வூதியப் பதிவு செயல்முறையான "சத்கார பியச"வை ஒருங்கிணைக்கும் ஒரு தனித்தன்மையுள்ள செயல்முறையாக அனைத்து ஓய்வூதிய பதிவு செயல்முறையும் உருவாக்கப்பட்டது.

இதன் விளைவாக, ஓய்வூதிய விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் நேரம் 40 நிமிடங்களாக இருந்தமை 15 நிமிடங்கள் வரை குறைவடைந்ததுடன் ஓய்வூதியக் கணிப்பீடு தொடர்பில் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற விசாரணைகளின் எண்ணிக்கையும் குறைவடைந்தது அத்துடன் மாற்றச் செயல்முறைகள் தானாகவே செய்யப்படுகின்றன, மேலும் பெறப்படும் விண்ணப்பங்களுக்காக செலவிடும் நேரமும் குறைவடைந்தது.

இயங்கலையில் 2016.10.08 திகதியில் இருந்து 2016.12.31 திகதி வரை 6238 விண்ணப்பங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன் 4249 விண்ணப்பங்களின் அச்சுப் பிரதிகள் பெறப்பட்டுள்ளன. மேலும், 1903 விண்ணப்பங்களில் 22.4% நிராகரிக்கப் பட்டுள்ளதுடன் 44.8% இற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோரின் நிலுவைத் தொகை தொடர்பில் எழும் பிரச்சனைகளையும் நாடு முழுவதிலும் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் வழங்குவதையும் ஒழுங்காக்கற் பொருட்டும் திணைக்களத்தால் பெறப்பட்ட ஓய்வூதிய நிலுவைக்கான வேண்டுகோள்களைக் கருத்தில் கொள்ளும் நோக்கிலும் திணைக்களத்தில் "செயல்பாட்டு அலகு" நிறுவப்பட்டது.

ஓய்வூதிய முகாமைத்துவ அமைப்பின் மூன்றாம் கட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் தேசிய ஓய்வூதிய தின விழாவின் போது புகையிரத ஆணைச்சீட்டை வழங்குவதற்கான திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

குறைபாடுகள், தவறுகள் , தாமதங்கள் மற்றும் மேற்கூறப்பட்ட நேர நுகர்வுகள் ஆகியவற்றிலிருந்து விடுபடும் நோக்கில் மத்திய தரவுத் தளத்துடன் தொடர்புடையதாக உருவாக்கப்பட்ட ஒரு தானியங்கி நிகழ்ச்சித் திட்டம் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உருவாக்கப்பட்டதுடன் அதற்கமைய ஓய்வூதிய நிலுவைகள் வழங்கல்ச் செயல் முறையைப் பன்முகப்படுத்த முடிந்துள்ளதுடன் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கலைப்படுத்தவும் முடிந்துள்ளது. இதன் காரணமாக 2016 மார்ச் மாதத்திலிருந்து 2016.12.31 ஆம் திகதிவரை பெறப்பட்ட 14,998 ஓய்வூதிய நிலுவை விண்ணப்பங்களில் 9,670 விண்ணப்பங்களிற்கான நிலுவைக் கொடுப்பனவுகளை வழங்க முடிந்துள்ளது.

ஓய்வூதிய முகாமைத்துவத் தொகுதியின் 3 ஆம் கட்ட நடவடிக்கையின் கீழ் 2016 ஆம் ஆண்டின் தேசிய ஓய்வூதிய தினக் கொண்டாட்டத்தினூடாக மத்திய தரவுத்தள இயங்கலை மூலம் இலவச புகையிரத ஆணைச்சீட்டு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் ஓய்வூதியத் திணைக்களம், 2017 ஆம் ஆண்டு பொதுச் சேவை நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களுக்கு இயங்கலை மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளல் பொருட்டு 2016 இல் புதிய மென் பொருளொன்றை வெற்றிகரமாக வடிவமைத்துள்ளதுடன் பரந்துபட்ட தரவுத் தளம் ஒன்றையும் உருவாக்க எதிர்பார்த்துள்ளது. 2015 இல் இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அது மட்டுப்படுத்தப்பட்டதுடன் "சத்கார பியச" விற்கு வருகைதரும் அனைவருக்கும் இவ் வடையாள அட்டை வழங்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, இவ் இலத்திரனியல் அடையாள அட்டையூடாக வாழ்கைச் சான்றிதழ் பெறும் செயற்பாடும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 2016 இல் இலவச புகையிரத ஆணைச்சீட்டு வழங்கற் கருத்திட்டம் விரிவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் தகவல் தொழில் நுட்பத் தொகுதியை அபிவிருத்தி

செய்யும் பொழுது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். இத்தொகுதியில் ஓய்வூதியர்களது கொடுப்பனவு விபரங்கள் மற்றும் பதிவுகள் போன்ற பெறுமதிவாய்ந்த தகவல்கள் பேணிப் பதுகக்கப்பட்டு வருவதுடன் திணைக்களத்திற்கு சொந்தமான பழைய சேமிப்பான்களில் 2016 ஆம் ஆண்டு வரைக்குமான தகவல்களைச் சேமிப்பது ஆபத்தானதாகவும் காணப்படுகிறது. ஐ.சி.ரி.ஏ ஆல் கைவிடப்பட்ட 5 சேமிப்பான்களும் பழுது பார்க்கப்பட்டதுடன் சேவையறையின் பாதுகாப்புச் செயன் முறைகளும் மீள்நிறுவப்பட்டு சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டது மேலும் தகவல்களைப் பத்திரப்படுத்துவதற்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டது. பிற்பாடு கொள்வனவு செய்யப்பட்ட சேமிப்பான்களுடன் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சொந்தமான மேற்கூறப்பட்ட 9 சேமிப்பான்களாலும் பயனுறு தகவல் தொழில் நுட்ப சேவையில் நிறைவுடைய வெளி மற்றும் உள்ளக தேவைகள் வழங்கப்படுகிறது.

சேமிப்பான்களைப் பராமரித்தல் மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்தல் ஆகியசேவைகளைப் பெறுதற்பொருட்டு ஓய்வூதியத் திணைக்களத்துடன் எடிசலாட் நிறுவனம் (த.நி) உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளதுடன் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளியே மாவட்டச் செயலகங்கள் , பிரதேச செயலகங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் அடங்கலாக நாடளாவிய ரீதியில் ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைந்து தகவல் பரிமாற்றச் செயல்முறை முன்னெடுக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 14.0 மில்லியனிலிருந்து உச்சப்பயன் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் தகவல் தொழில் நுட்பப் பெறுமதியான மென்னொருள் அபிவிருத்தி வளர்ச்சியால் ரூபா 3,000,000 மென்பொருள் உள்ளீடு வழங்க முடிந்துள்ளது.

## 02. பதிவு செய்யும் செயல்முறை

பதிவு செய்தற் செயன் முறையானது, ஓய்வூதியத் திணைக்களத்தின் செயன் முறை அலகுகளில் அடிப்படைப் படிமுறையாகும். கொடையளிப்பை பெற்றுக்கொண்டவர்களில் இருந்து உரித்துடையவர்களைத் துல்லியமாக தெரிவு செய்வதுடன் , உரித்துடைய நன்மைகளைத் தீர்மானிப்பதுவும் முதன்மைப் பொறுப்பாவதுடன் அதன் மூலம் ஓய்வூதியத் திணைக்களம் அரசிற்கும் ஓய்வூதியர்களுக்கும் வெளிப்படைத் தன்மையுடனும் துல்லியமாகவும் பதிவுசெய்தல் செயன்முறையைச் பராமரிக்கிறது.

விளக்கப்படம் 01




ஓய்வூதியத் திணைக்களத்தில் பதிவு செய்யும் செயல் முறையானது ஓய்வூதியப் பதிவு, விதவை, தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியப் பதிவு, மற்றும் பொதுச் சேவை நம்பிக்கை நிதியப் பதிவு எனும் மூன்று பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 01

| பதிவுசெய்யப்பட்ட ஓய்வூதிய எண்ணிக்கை - 2016 | |
|---|---|
| **மாதம்** | **2016** |
| ஜனவரி | 1969 |
| பிப்ரவரி | 2044 |
| மார்ச் | 1555 |
| ஏப்ரல் | 1417 |
| மே | 1398 |
| ஜூன் | 1760 |
| ஜூலை | 2449 |
| ஆகஸ்ட் | 2198 |
| செப்டம்பர் | 2700 |
| அக்டோபர் | 1952 |
| நவம்பர் | 1475 |
| டிசம்பர் | 2454 |
| **மொத்தம்** | **23371** |

மூலம் – பதிவிடல் பிரிவு

### 2. 1 ஓய்வூதியத்தைப் பதிவுசெய்யும் செயல் முறை

2015 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியம் 3/2015 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்று நிருபத்திற்கமைய செயற்படுத்தப்படும். ஓய்வூதியப் பதிவிலக்கமானது PD 3 படிவத்தைப் பூரணப்படுத்தி சமர்பிப்பதன் மூலம் வழங்கப்பட்டது. எனவே ஓய்வுபெற எதிர்பார்த்துள்ள அலுவலர்கள் பொருத்தமான PD 3 படிவத்தைப் பூரணப்படுத்தி இறுதியாகக் கடமையாற்றிய அலுவலகத்தினூடாக

ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்கமைவாகவே ஓய்வூதிய இலக்கம் வழங்கப்படுவதுடன் விண்ணப்பத்தை ஆராய்ந்த பிற்பாடு மாதாந்த ஓய்வூதியம் அல்லது பணிக் கொடை கொடுப்பனவு வழங்கப்படும்.

விளக்கப்படம் 02




2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நவீன தொழில் நுட்பப் போக்குகளைப் பயன்படுத்தி 3/2015 (திருத்தம்II) ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கமைய இறுதியாகக் கடமை புரிந்த நிறுவனத்தினூடாக இயங்கலைத் தரவுத் தொகுதிக்கு விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய தகவல்கள் பதிவிடப்படுகின்றன. தரவேற்றம் செய்யப்பட்ட உள்ளீட்டுத் தகவல்கள் சில நிமிடங்களிலேயே ஓய்வூதியத் திணைக்களத்தால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறான இயங்கலைத் தரவுத் தொகுதி உருவாக்கப்பட்டதனூடாக, இதன் முன்னர் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தால் பெற்றுக் கொள்ளப்படும் தவறான தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை கணிசமன அளவு குறைவடைந்துள்ளது.

அவ்வவ் நிறுவனங்கள் தரவுத் தொகுதிக்கு தகவல்களை தரவேற்றம் செய்த பிற்பாடு பெறப்படும் தரவுத்தாளை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை 02**

| மாதம் | சிவில் | இராணுவம் | 2016 |
|---|---|---|---|
| ஜனவரி | 1212 | 757 | 1969 |
| பிப்ரவரி | 1045 | 999 | 2044 |
| மார்ச் | 925 | 630 | 1555 |
| ஏப்ரல் | 958 | 459 | 1417 |
| மே | 978 | 420 | 1398 |
| ஜூன் | 1130 | 630 | 1760 |
| ஜூலை | 1719 | 730 | 2449 |
| ஆகஸ்ட் | 1258 | 940 | 2198 |
| செப்டம்பர் | 1,568 | 1,132 | 2700 |
| அக்டோபர் | 983 | 969 | 1952 |
| நவம்பர் | 9 | 233 | 242 |
| டிசம்பர் | 5 | 313 | 318 |
| மொத்தம் | **11790** | **8212** | **20002** |

மூலம் – பதிவிடல் பிரிவு

அத்துடன் முற்றுமுழுதான ஆய்வின் பிற்பாடு ஓய்வூதிய இலக்கம் வழங்கப்படும். வழங்கப்பட்ட இலக்கத்தைக் கொண்டு வலைத் தளத்தினூடாக ஓய்வூதியம் தொடர்பான விடயங்களைப் பாரீட்சிக்க முடியும். அத்துடன் குறுந்தகவல் மூலம்

ஓய்வூதியரது கையடக்கத் தொலைபேசிக்கு அறிவிக்கப்படும். இயங்கலையில் அனுப்பிய விண்ணப்பத்தில் எவையேனும் தவறுகள் கண்டறியப்பட்டால் இயங்கலையினூடாகவே மீண்டும் அறிவித்தல் விடுப்பதுடன் ஓய்வூதியருக்கு மீண்டும் இதுதொடர்பில் குறுந்தகவல் அனுப்பப்படும். விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுளை நிவர்த்தி செய்யும் பொருட்டு நிறுவனத்திலிருந்து பெறப்பப்பட்ட தகவல்தாளை ஓய்வூதியத் திணைக்களத்தால் மீண்டும் அந்நிறுவனத்திற்கே திருப்பி அனுப்பி வைக்கப்படும். அதற்கேற்ப சிவில் மற்றும் இராணுவ ஓய்வூதியப் பதிவுகள் நடைமுறைப் படுத்தப்படுவதுடன் மேற் கூறிய செயன் முறையூடாக ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் ஓய்வூதிய சமுதாயம் பல நன்மைகளைப் பெறுகிறது. விசேடமாக ஓய்வூதியக் கணிப்பீட்டிற்கான தகவல்கள் தரவுத்தள தொகுதிக்குப் பதிவேற்றும் போது அதற்கான கணிப்பீடுகளும் அவத்தானிப்புகளும் தானாவே நடைபெறுவதால் செலவிடப்படும் நெர அளவு குறைவடைகிறது.

மேலும் ஓய்வூதியம் தொடர்புபட்ட அரச நிறுவனங்களும் தமது தவறுகளை சரிசெய்வதற்கு ஒரு சந்தர்ப்பமும் கிடைக்கப் பெறுகிறது

விளக்கப்படம் 03




அட்டவணை 03

| மாதம் | சிவில் | இராணுவம் | மொத்தம் |
|---|---|---|---|
| நவம்பர் | 890 | 343 | 1233 |
| டிசம்பர் | 1,712 | 424 | 2136 |
| **மொத்தம்** | **2602** | **767** | **3369** |

மூலம் – பதிவிடல் பிரிவு

அத்துடன் இதன் காரணமாக ஓய்வூதியப் பதிவிடலில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த பதிவிடல் முறைகளின் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்திற்குக் கிடைக்கும் விசாணைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைடைந்துள்ளது. மேலும் ஓய்வூதியருக்கான முதலாவது ஓய்வூதியக் கொடுப்பனவு குறுந்தகவலூடாக அறிவிக்கப்படும்.

## 2.2. விதவைகள் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தில் பதிவுசெய்தல்.

அரச சேவையில் இணைந்த அனைத்து அரச அலுவலர்களும் 1898 இன் 01 ஆம் இலக்க கட்ளைச் சட்டத்தின் கீழ் 1898.06.23 ஆம் திகதியிலிருந்து கட்டாயமாக விதவை,

தபுதாரர் மற்றும் அனாதைகள் ஒய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்தல் வேண்டும். அத்துடன் அவர்களது மாதாந்த ஊதியத்திலிருந்து இதற்கான பங்களிப்புத் தொகை அறவிடப்படுவதுடன், 1983 இன் 24 ஆம் இலக்க விதவை, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஒய்வூதியச் சட்டத்தின் பிரகாரம் அரச சேவையில் இணைந்த அனைத்து பெண் அரச அலுவலர்களும் 1983.08.01 ஆம் திகதியிலிருந்து கட்டாயமாக விதவை, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்வதுடன் அவர்களது மாதாந்த ஊதியத்திலிருந்து இதற்கான பங்களிப்புத் தொகை அறவிடப்படும். கூறப்பட்ட பதிவு நடவடிக்கையில் காணப்பட்ட பலவீனத் தன்மையால் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரிமைக் கொடையளிப்புக் காலகட்டத்தில் அலுவலர்கள் மற்றும் அவர்களது துணைகள் பல சிரமங்ளை எதிர் கொண்டுள்ளனர். விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் பெற்றுக் கொள்ளமை மற்றும் சுயவிபரக் கோவையைப் புதுப்பிக்காமை ஆகியவற்றாலேயே இவ்வாறான இடர்பாடுகள் உருவானமை அவதானிக்கப்பட்டது. இதற்கமைய வினைத்திறன் உள்ள தீர்வாக 2016 ஆம் ஆண்ட்டில் இருந்து இயங்கலையினூடாக 2/2016 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் கீழ் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் ஒன்றைப் பெற்றுவதுடன் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஒய்வூதியச் சட்டத்தின் பிரகாரம் அனைத்து அலுவலர்களும் பதிவுகளை மேறகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

இயங்கலையில் பதிவிடலின் முதலாம் படியாக, அலுவலர் இறுதியாகக் கடமையாற்றிய நிறுவனத்தில் இவ்விடயம் சார்ந்த விடய உத்தியோகத்தர் மேற்படி அலுவலரின் நியமனக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதிகளை தரவேற்றம் செய்தல் வேண்டும். அதன் பின்னர் , தரவுத் தளத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற அச்சுப் பிரதியை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். பத்திரங்கள் பரிசீலிக்கப்பட்டு அவ் அலுவலர் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதுடன் அதற்குப் பொருத்தமான விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் இலக்கம் அவ் அலுவலருக்கு வழங்கப்படும். ஓய்வூதியத் திணைக்களத்தின் வலைத்தள பக்கத்தில் உள்ள சேவைச் சாளரத்தை அணுகுவதன் மூலம் வழங்கப்பட்ட பதிவிலக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஓர் அலுவலரின் ஓய்வூதியக் கோவையைப் புதுப்பித்தல் செயன் முறையானது

எற்கனவே உள்ள செயன் முறைக்கமைய முன்னெடுக்கப்படுவதில்லை. அத்துடன் அனைத்து அரச நிறுவனங்களிற்கும் 2/2015 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்மந்தப்பட்ட அலுவலர்களின் ஓய்வூதியக் கோவைகளிற்கமைய விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கோவையைப் புதுப்பித்தல் வெண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓய்வூதியக் கோவைகளைப் புதுப்பித்து இலக்கங்ளை வழங்கும் முறையானது எளிய மற்றும் இலகவான செயல் முறை என்பதுடன் ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்படும் முறைப்பாடுகளும் குறைவடைந்துள்ளது. அச்சுப் பிரதிகளுக்குப் பதிலாக மின் அணு பதிவு அறைகளில் சேமித்துப் பாதுகாப்பது தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் விதவை, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தை மீளப்பதிவு செய்வதனூடாக பூரணமான தரவுத் தளத்தை கட்டியெழுப்புவதற்காக பொருத்தமான தொகுதி அபிவிருத்தி செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டு மீதமுள்ள விதவை, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய அங்கத்தவர்களை பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் அரம்பிக்கப்படவுள்ளது.

### 2.2.1 விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பதிவுசெய்தல்.

விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டதின் கீழ் பதிவு செய்த மரணடைந்த பங்களிப்பாளர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுக்கான பதிவுச் செயற்பாடுகள் ஆரம்பிகப்பட்டதன் பிற்பாடு நெறிமுறைக் கால எல்லைக்குள் வயதெல்லையைக் கொண்ட அனாதைகள் அல்லது துணைவர்களுக்கு அம் மரணமடைந்த பங்களிப்பாளரது விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் கொடுப்பனவுகள் வழங்கப்படும். கொடுப்பனவுளை ஆரம்பிக்க உரித்துடைய பதிவுகள் அண்மைக் காலத்தில் பன்முகப்படுத்தப் பட்டதுடன் ஓய்வூதியத் திணைக்களத்தின் வேண்டுகோளிற்கிணங்க பிரதேச செயலகங்களால் பங்களிப்பாளர் இறந்ததும் அவரது மரண அத்தாட்ச்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அவரது ஓய்வூதியக் கோவைகளை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தனித் தன்மையான தொகுதியின்மையால் பிதேச செயலகங்களால் பன்முகப்படுத்தப்பட்ட தொகுதிக்கமைய நாடு முழுவதம் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய இலக்கங்கள் வழங்கியபோது பல ஓய்வூதியர்களுக்கு ஒரே ஓய்வூதியம் இலக்கம் வழங்கப்பட்மை கண்டறியப்பட்டதுடன் மேற்கூறிய செயன் முறை விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரிமம் வழங்கல் செயற்பாடுல் நேரத்தை

எடுத்துக்கொள்ளும் செயல் முறையாகும். ஆகையால் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஒய்வூதியக் பதிவானது நாடு முழுவதிலும் ஒரு மையப்படுத்தப்பட்ட தொகுதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலகம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் ஆகியவை ஒரு வலையமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பிரதேச செயலகங்கள் மேற் கூறிய செயன் முறைக்கு விதவைகள் அனாதைகள் தபுதாரர்கள் ஓய்வூதிய உரித்துடையவர்கள் PD 4 படிவத்தை கோவைப்படுத்துவதுடன் அதன் பின் பொருத்தமான தகவல்களை பங்களிப்பாளரின் மரண அத்தாட்சிப் பத்திரம் அடங்கலாக ஸ்கான் செய்து அப்பிரதிளை தரவேற்றம் செய்தல் வேண்டும்.

விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவால் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பதிவேட்டறையில் இருந்து பெறப்பட்ட விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய மூலக் கோவை தொடர்பில் முழுமையான ஆய்வு நிறைவடைந்ததன் பின்னர் இருபதாயிரம் இலக்கத் தொடரில் ஆரம்பிக்கும் மேற்சொன்ன விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் வழங்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஓய்வூதியருக்கு விதவை, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கோவைகள் முன்பே வழங்கப்பட்டிருப்பின் ஸ்கான் செய்து வலைத் தளத்தில் தரவேற்றப்பட்ட ஆவணங்ளைப் பரிசீலனை செய்து அவ் இலக்கத்தை வழங்க வேண்டும்.

விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கொடைப் பத்திரம் இயங்கலையில் சுயமாகவே உருவாக்கப் படுவதுடன் ஓய்வூதியர் ஓய்வூதியம் பெறும் போது அதன் நகல் ஒன்று ஓய்வூதியருக்கு அஞ்சல் ஊடாக அனுப்பப்படும. தேவையேற்படின் மேலும் பிரதிகள் பெறும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அனாதைகள் மற்றும் ஊனமுற்றோருக்கான பதிவுகள் மேற் குறிப்பிடப்பட்ட படிமுறைப்படியே ஆகும்.

## 2.3 பொதுச் சேவை நம்பிக்கை நிதியத்தில் பதிவு செய்தல்.

1942 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்திற்கமைய 1942.04.01 ஆம் திகதியிலிருந்து பொதுச் சேவை நம்பிக்கை நிதியத்தில் நன்மையைப் பெற உரித்துடையவர்களாக சேவை நிமித்தம் வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்ட ஓய்வூதிய உரித்தற்றவர்கள் , மத்திய மற்றும் மானில அமைச்சுக்களில் சேவையாற்றும் ஓய்வூதிய உரித்தற்ற பதவிநிலை அலுவலர்கள் மற்றும் ஓய்வூதிய உரித்தற்ற நாளாந்த கொடுப்பனவின் கீழ் சேவையாற்றும் அமைய , பிரதியீட்டு மற்றும் தற்காலிக அலுவலர்கள் ஆகியோர் கருத்தில் கொள்ளப்படுகின்றனர். பொதுச் சேவை

நம்பிக்கை நிதியத்திற்கு உரித்துடையோருக்கு இந்நிதியத்திற்கு தொழில் வழங்கும் நிறுவனத்தால் அலுவலரின் ஊதியத்தின் 8 % மான தொகை கட்டாயக் கொடுப்பனவாகவும் அரசால் அலுவலரின் ஊதியத்தின் 12 % மான தொகை கட்டாயக் கொடுப்பனவாகவும் செலுத்தப்படல் வேண்டும்.

மேலும் பொதுச் சேவை நம்பிக்கை நிதியத்தல் பதிவு செய்ய ஆர்வமுள்ள அலுவலர்கள் பூரணப்படுத்தப்பட்ட PP1N மற்றும் PP2N அகிய விண்ணப்பப் படிவங்ளை தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் அமய / தற்காலிக கடிதத்துடன் திணைக்களத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தி தொழில் வழங்கும் நிறுவனத்துாடாக ஓய்வூதியத் திணைக்கத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணபபத்தை முழுமையாக ஆராய்ந்த பிற்பாடு பொதுச் சேவை நம்பிக்கை நிதியத்தால் அங்கத்தவராக பதிவு செய்யப்பட்டு இலக்கம் வழங்கப்படுவதுடன் , இது தொடர்பில் நிறுவனத் தலைவருக்குக் கடித மூலம் அறிவிக்கப்படும். அதன் பிற்பாடு அந் நிறுவனம், தொடர்புடைய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கும்.

மேற் கூறப்பட்ட செயன் முறையைத் துரிதப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இச் செயற்பாடுகள் 2016 இல் கடித மூலம் நத்தை வெகத்தில் செயற்படும் அஞ்சல் சேவை மூலமே முன்னெடுக்கப்பட்டது , அத்துடன் இச் செயன்முறையை இயங்கலையினூடாக முன்னெடுத்து அங்கத்தவர்கள் மற்றும் நிறுவனங்களிடையே தகவல்களைப் பரிமாற்றல் , கண்காணித்தல் மற்றும் பதிவுசெய்தல் ஆகிய செயற்பாடுளை குறைந்த காலத்தில் செயற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்பட்டுகிறது. மேலும் இதற்கான இயங்கலைத் தொகுதி ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## 03. முதல் கொடுப்பனவுச் செயல் முறை

முதல் கொடுப்பனவுச் செயல் முறை என்பது அரச சேவையிவிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் அல்லது இறந்த அலுவலர்களது துணைகள் அல்லது ஊனமுற்ற அல்லது அனாதைகளான வாரிசுக்கள் ஆகிய பிவிவினருக்கு வழங்கப்படும் முதலாவது ஓய்வூதியக் கொடுப்பனவுச் செயன்முறையே இதுவாகும்.

2016 ஆம் ஆண்டு முடிவில் தகவல் தொழில் நுட்ப துரித வளர்ச்சியின் காரணமாக பன்முகப்படுத்தப் பட்டிருந்த இச் செயன் முறை மையப்படுத்தப்பட்ட செயற்பாடாக மாற்றப்பட்ட அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் முதலாம் கொடுப்பனவு மத்திய தரவுத்தள தொகுதியினூடாக இயங்கலைக் கொடுப்பனவுச் செயன்முறையாக மாற்றப்பட்டுள்ளது.

### 03.1. “சத்கார பியச”

கொடுப்பனவுகள் ஆரம்பிக்கு முன்பாக ஓய்வூதியர் சமூகத்தினர் “சத்கார பியச” வால் நடாத்தப்படும் நேர்காணல் ஒன்றில் பங்குபற்ற வேண்டியது கட்டாயமான தொன்றாகும். வழங்கப்பட்ட ஓய்வூதிய இலக்கத்துடன் ஓய்வூதியம் மற்றும் விவைகள் அனாதைகள் கொடுப்பனவுக்கு தேவையான ஆவணங்களுடன் “சத்கார பியச” விற்கு வருகை தரவேண்டிய திகதி தொடர்பில் ஓய்வூதியருக்கு கடித மூலம் அறிவிக்கப்படும் மேலும் இது தொடர்பில் குறுந்தகவல் மூலமும் ஓய்வூதியருக்கு அறிவிக்கப்படும். “சத்கார பியச” விற்கு வருகை தந்து நேர்காணலில் பங்குபற்றிய ஓய்வூதியர்களது ஓய்வூதிய இலக்கத்தின் கீழ் பொருத்தமான விபரங்கள் தரவுத்தளத் தொகுதியில் தரவேற்றம் செய்யப்படுவதுடன் ஓய்வுதியம் செயற்படுத்தப்படும் அத்துடன் விதவைகள் அனாதைகள் தபுதாரர்கள் ஓய்வூதியக் கொடையளிப்பு உரித்தை உறுதிப்படுத்துதல் தொடர்படைய விபரங்கள் ஸ்கான்செய்யப்பட்டு பதிவு செய்யப்படும்.



மூலம் – ஊடகப் பிரிவு

ஓய்வூதியத் திணைக்களத்தில் பராமரிக்கப்பட்ட விதவைகள் அனாதைகள் தபுதாரர்கள் ஓய்வூதியக் கோவையிலுள்ள அனைத்து ஆவணங்களும் ஸ்கான் செய்யப்பட்டு தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதுடன் கொடைப் பத்திரத்துடன் அக்கோவையும் ஓய்வூதியரிடம் ஒப்படைக்கப்படும். அத்துடன் இலத்திரனியல் அடையாள

அட்டை வழங்கற் பொருட்டு விரல் இரேகை பிரதியும் பெறப்பட்டு தரவுத்தளத் தொகுதியில் உட்சேர்க்கப்படும்.

நேர்காணலில் கிடைத்த பயன்களை உறுதுப்படுத்திய பின்னரே இயங்கலையினூடாக பதிவு செய்யப்பட்ட ஒய்வுதியர்களுக்கான ஓய்வூதியம் செயற்படுத்தப்படுமாகையால் “சத்கார பியச” என்பது ஓய்வூதியத்தைப் பதிவு செய்யும் ஒருசெயல் முறையெயாகும். “சத்கார பியச” வில் ஆரமபத்திலிருந்து நீண்ட வரிசைப் பட்டியல் இருந்த போதும் ஒரு நாளைக்கு 50 நேர்காணல்களே நடாத்த முடிந்துள்ளது. ஆனால் ஓய்வூதியப் பதிவுடன் இவ் வரிசைப் பட்டியல் சேர்க்கப்பட்டதால் ஒரு நாளைக்கு 120 நேர்காணல்கள் நடாத்துவதன் மூலம் இச்சேவையை விரைவுபடுத்த முடிந்துள்ளது. அதன்படி 2016 ஆம் ஆண்டில் 13990 நேர்காணல்கள் நடாத்தப்பட்டது.

## 3. 2 முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

“சத்கார பியச” நேர்காணல் முடிவடைந்ததும் அடுத்து வரும் மாதத்தில் முதலாவது ஓய்வூதியக் கொடுப்பனவு ஓய்வூதியரின் தனிநபர் வங்கிக் கணக்கில் வரவிடப்படுவதுடன் “சத்கார பியச” நேர்காணலிலன் மூலம் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலின் அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தப்படும்.

2015 ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்ட முதற் கொடுப்பனவின் பிரகாரம் முதற்கொடுப்பனவு ஓய்வூதியரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிடப்படுவதுடன் மேற் கூறிய செயல் முறை 2016 இல் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. திருத்தங்களை உடனடியாக மேற்கொள்வதற்கும் செலுத்தப்பட்ட கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கும் இவ்வபிவிருத்தி செய்யப்பட்ட செயன் முறை உதவுகிறது. அதற்கமைய “சத்கார பியச” வில் ஓய்வூதியரின் உறுதிப்படுத்தல் பெறப்படும்.

விளக்கப்படம் 04



அட்டவணை 04

| மாதம் | சிவில் | இராணுவம் | மொத்தம் |
|---|---|---|---|
| ஜனவரி | 1078 | 750 | 1828 |
| பிப்ரவரி | 1206 | 840 | 2046 |
| மார்ச் | 999 | 909 | 1908 |
| ஏப்ரல் | 859 | 547 | 1406 |
| மே | 634 | 458 | 1092 |
| ஜூன் | 428 | 384 | 812 |
| ஜூலை | 295 | 385 | 680 |
| ஆகஸ்ட் | 1084 | 446 | 1530 |
| செப்டம்பர் | 2268 | 775 | 3043 |
| அக்டோபர் | 1457 | 665 | 2122 |
| நவம்பர் | 1691 | 546 | 2237 |
| டிசம்பர் | 1023 | 682 | 1705 |
| **மொத்தம்** | **13022** | **7387** | **20409** |

மூலம் – பதிவிடல் பிரிவு

ஓய்வூதியரிற்கு முதல் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதற்கு முன்பான மூன்று மாத காலப்பகுதிக்குள் எங்கு கடமையாற்றினாரோ அந் நிறுவனத்தால் அவ்வோய்வூதியர் நிரந்தரமாக வதியும் பொருத்தமான பிரதேச செயலகத்திற்கு அக் கோவை அனுப்பிவைக்கப்படல் வெண்டும். அவ்வாறு இல்லையெனில் ஓய்வூதியம் நிறத்தப்படும். அனைத்துக் கொடுப்பனவுகளும் திருத்தமாகவும் தவறின்றியும் மேற்கொள்ளப்படுகிறதா என்பது ஓய்வூதியத் திணைக்களத்தால் உறுதிப்படுத்த முடியும்.

தகவல் தொழில்நுட்பப்பிரிவில் முதல் கொடுப்பனவு அறிக்கை மாதாந்தம் பெற்றுக் கொள்வதன் மூலம் நாடு பூராவும் உள்ள பிதேச செயலகங்களில் கடமையாற்றும் ஓய்வூதிய அலுவலர்களின் பொருத்தமான ஒருங்கிணைப்பிற்காக ஒவ்வொரு மாவட்டங்களிற்கும் கொடுப்பனவு தொடர்பான அறிக்கை மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுவதுடன் தொடர்படைய பிரதேச செயலகங்களிலிருந்து பெற்ற தகவல்கள் மூலம் கோவைகள் பெறப்பட்டுள்ளனவா என்பது மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலரால் உறுதிப்படுத்தப்படும். தொடர்புடைய கோவையைப் பெறவிலையெனில் ஓய்வூதியர் மற்றும் சம்பந்தபட்ட நிறுவனத்திற்கு அறிவித்தல் வழங்கப்படுவதுடன் பிரதேச செயலகங்களுக்கு கோவைகள் மூன்று மாத காலப்பகுதிக்குள் கிடைக்கப் பெறவில்லையெனில் ஓய்வூதியம் தற்காலிகமாக நிறுத்தப்படும்.

**விளக்கப்படம் 05**




பிதேச செயலகத்தால் கோவை பெற்ற பிற்பாடு நிலுவையுடன் ஓய்வூதியம் மிண்டும் ஆரம்பிக்கப்படும். ஓய்வூதியம் நிறுத்தப்பட்டமைக்கான மீளாய்வு மெற்கொள்ளப்படுவதுடன் மேற் குறிப்பிட்ட செயற்பாடுகளால் போலிக் கொடுப்பனவு மற்றும் இரட்டைக் கொடுப்பனவு ஆகியவை தடுக்கப்படும். முதற் கொடுப்பனவுக்கான நிதி வைப்புக்கள் திணைக்களத்தின் கணக்குக் கிளையால் நிர்வகிக்கும் போது திருத்தமான கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகிறதா என்பது தொடர்சியாக பரிசீலிக்கப்படும்.

**அட்டவணை -05**

| வங்கி | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2015 | 2016 |
| மக்கள் வங்கி | 199826 | 207008 |
| இலஙகை வங்கி | 138456 | 145339 |
| தேசிய சேமிப்பு வங்கி | 70029 | 75176 |
| ஏனைய வங்கிகள் | 152149 | 151985 |
| **மொத்தம்** | **560460** | **579508** |

மூலம் – பதிவிடல் பிரிவு

முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான பட்டியல் ஓய்வூதியத் திணைக்களத்தின் கணக்குக் கிளையால் பராமரிக்கப்படுவதால் தொடர்புடைய மாதாந்தக் கணக்குகளில் போலிக் கொடுப்பனவு மற்றும் இரட்டைக் கொடுப்பனவு போன்ற தவறுகளைக் கண்டறியும் ஆய்வின் பிற்பாடு தொடர்புடைய கொடுப்பனவு தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதுடன் மேற்குறிப்பிட்ட அறிக்கை பதிவிடற் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு கொடுப்பனவுகள் திருத்தமாகவும் சரியாகவும் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பது மீளாய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கை கணக்குக் கிளையால் மேற்கொள்ளப்படும்.

மொத்தக் கொடுப்பனவுகளும் குறிப்பிடப்பட்ட ஓய்வூதியர்கள், ஓய்வூதியம் பெறும் வங்கிகளிற்கு அவர்களது பெயர் விபரப் பட்டியலுடன் காசோலையாகச் செலுத்தப்படும். தகவல் பட்டியலின் பிரகாரம் 13 வங்கிகளிற்கும் 13 காசோலைகள் செலுத்தப்படுகின்றன. அத்துடன் வரவிடுவதற் பொருட்டு “ரஜமிண கிளைக்கு” கடிதமூலம் தகவல் அறிவிக்கப்படும்.

நாடளாவிய ரீதியில் தபாலகங்களில் ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் அவர்களது பெயர் விபரப் பட்டியலுடன் காசோலையாக தபாற் திணைக்களத்திற்கு

அனுப்பி வைக்கப்படும். தபாற் தலைமையகம் பொருத்தமான தகவல்களையும் நிதியையும் சம்பந்தப்பட்ட தபாலகங்களிற்கு அனுப்பி வைப்பதுடன் குறித்த கால எல்லைக்குள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் ஓய்வூதியருக்கு சம்பந்தப்பட்ட தபாலகம் வழங்குகிறது. மெலும், சனச மற்றும் பிராந்திய வங்கிகளால் ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவு களிற்கான நிதி பிரதேச செயலகங்களிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் அவ் வங்கிகளிற்கு பிரதேச செயலகங்களால் நிதி செலுத்தப்படுகின்றன. மொத்த நிதி நிர்வாகமும் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் குறைந்த மனித வளத்துடன் இச்செயன் முறை நிறைவேற்றப்படுகிறது. மேலும் ஒரு வங்கிக்கு ஒரு கசோலை அனுப்புவதால் தேவையற்ற செலவுகள் குறைக்கப்படும்.

மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பாளரது விதவைகள, அனாதைகள், தபுதாரர்கள் மற்றும் ஊனமற்றோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

### 3.3. விதவைகள் அனாதைகள் தபுதாரர்கள் ஓய்வூதிய முதல் கொடுப்பனவு செயன் முறை.

ஓய்வூதிய வகைப்படுத்தலின் கீழ் பொருத்தமான உரிமையாளர்களான இறந்த விதவைகள் தபுதாரர்கள்

**விளக்கப்படம் 06**




**அட்டவணை 06**

| மாதம் | விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவு எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 690 |
| பிப்ரவரி | 740 |
| மார்ச் | 889 |
| ஏப்ரல் | 1054 |
| மே | 863 |
| ஜூன் | 949 |
| ஜூலை | 756 |
| ஆகஸ்ட் | 771 |
| செப்டம்பர் | 802 |
| அக்டோபர் | 703 |
| நவம்பர் | 831 |
| டிசம்பர் | 744 |
| **மொத்தம்** | **9792** |

மூலம் – கணக்குப் பிரிவு

**விளக்கப்படம் 07**




**அட்டவணை -07**

| மாதம் | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியமாக வழங்கப்பட்ட தொகை |
|---|---|
| ஜனவரி | 120.55 |
| பிப்ரவரி | 152.89 |
| மார்ச் | 195.95 |
| ஏப்ரல் | 222.46 |
| மே | 166.46 |
| ஜூன் | 184.11 |
| ஜூலை | 143.54 |
| ஆகஸ்ட் | 120.90 |
| செப்டம்பர் | 133.65 |
| அக்டோபர் | 122.29 |
| நவம்பர் | 141.33 |
| டிசம்பர் | 140.11 |
| **மொத்தம்** | **1,844.32** |

மூலம் – வி.அ.ஓ பிரிவு

### 3.3.1. விதவைகள் மற்றும் தபுதாரர்களுக்கான முதற் கொடுப்பனவு.

விதவைகள் மற்றும் தபுதாரர்களுக்கான ஓய்வூதியப் பங்களிப்பாளர் இறந்ததையடுத்து விதவைகள் மற்றும் தபுதாரர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படுகிறது. விதவைகள், அனாதைகள், தபுதாரர்கள் மற்றும் ஊனமுற்றோருக்கான ஓய்வூதியருக்கான இலக்கம் வழங்கப்பட்ட பின்னர் இறந்த அலுவலரது துணைக்கு அவர் இறந்த நாளிலிருந்தான நிலுவைகள் உடனான கொடுப்பனவு வரவிலிடப்படும். இயங்கலைத் தரவுத்தளத் தொகுதிக்கமைவாக அதிக பட்சம் 10 இலட்சம் ரூபா கொடுப்பனவு செய்யப்படுவதுடன் இத் தொகையைவிட அதிகரிக்குமாயின் நிலுவைக் கொடுப்பனவு குழுவின் அனுமதியுடன் கொடுப்பனவு செய்யப்படும். மேலும், பிரதேச செயலகங்கள் , கொடுப்பனவு செய்யப்படும் மாதத்தின் 25 ஆம் திகதிக்கு முன்னதாக சரியான பொருத்தமான தகவல்களை தரவுத்தளத் தொகுதியில் தரவேற்றம் செய்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து வரும் மாதத்தில் அவ்வவ் வங்கிகளில் ஓய்வூதியம் வரவிலிடப்படும்.

### 3.3.2. அனாதைகள் முதற் கொடுப்பனவு.

அனாதைகளுக்கான ஓய்வூதியப் பங்களிப்பாளர் இறந்ததையடுத்து பங்களிப்பாளருக்கு பிறந்த 26 வயதிலும் குறைவான தொழிலற்ற திருமணமாகாத பிள்ளைகள் அனாதைகளுக்கான

மாதாந்தக் ஒய்வூதியக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர் ஆகின்றனர். அனாதைகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் விதவைகள், அனாதைகள், தபுதாரர்கள் ஓய்வூதியச் செயன் முறைக்கமைய இயங்கலைத் தரவுத் தளத்தினூடாகவே ஆரம்பிக்கப் படுகின்றன. அனாதைகளுக்கான ஓய்வூதியத்திற்குப் பொருத்தமான அனாதைகள் தொடர்பான பிறப்பத்தாட்சிப் பத்திரம் மற்றும் தொழில் இன்மையைக் காட்டும் சான்றிதழ் ஆகியவை பிரதேச செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அவரூடாக அனாதைகள் அறிக்க பெறப்படும்.

18 வயதிலும் அதிகமான பிள்ளைகளின் கொடுப்பனவு அவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிடப்படுவதுடன் 18 வயதிலும் குறைந்த பிள்ளைகள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்தின் முடிவிற்கிணங்க அனாதைப் பிள்ளைகளின் பாது காவலருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். அவ்வனாதைப் பிள்ளைக்கு 18 வயது பூர்தியானதும் பாது காவலரூடாக ஓய்வூதியம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு நேரடியாக அப்பிளைக்கே ஓய்வூதியம் வழங்கப்படும்.

### 3.3.3. ஊனமுற்றோருக்கான முதல் ஓய்வூதியக் கொடுப்பனவு.

விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பாளரது பிள்ளைகள் எவராயினும் ஊனமுற்றிருப்பின் இக்கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் அவ்வூனம் பிறப்பிலிருந்தோ அல்லது 26 வயதின் முன்னரோ (அனாதைகளுக்கான வயதெல்லை) உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ ஏற்பட முடியும். ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊனமுற்றோர் கோவைக்கான வேண்டுகோளின் பிராகாரம் இது தொடர்பில் பூரணமான ஆய்வொன்றை நிகழ்த்தி முடிக்கும் வரை ஊனமுற்றோர் கொடுப்பனவு வழங்கப்பட முடியாது. அத்துடன் ஒவ்வொரு ஊனமுற்றோர் தொடர்பிலும் தனித் தனி பரிசோனைகள் செய்யப்படுவதுடன் மருத்தவ சபை அறிக்கையின் பிரகாரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஊனத்தை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சிடமிருந்து மருத்துவ அறிக்கை பெறப்பட்ட பின் கொடுப்பனவு செய்யப்படும். மேற்படி சிபார்சானது சுகாதார அமைச்சினால் அவ்வூனமுற்ற நபருக்கு இடையூறு ஏற்படாவண்ணம் அவரது வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள வைத்திய சாலையில் உள்ள வைத்திய குளாத்திடமிருந்து பெறப்படலாம். அவ்வூனமுற்றவர் நிதி நடவடிக்கைகளை மெற்கொள்ள

முடியாதவராக இருக்கும் சந்தர்ப்பத்தில் பாதுகாவலர் ஒருவர் நியமிக்கப்படுவார். முழுமையாக ஊனமுற்றவருக்கு வாழ்நாள் முழமைக்கும் இவ்வோய்வூதியம் வழங்கப்படுவதுடன் ஏனையோருக்கு ஒவ்வொரு ஐந்து வருடங்களிற்கு ஒரு முறை அவரது ஊனத் தன்மை பரீட்சிக்கப்பட்டு மருத்துவ அறிக்கை பெறப்பட்டு ஓய்வூதியம் புதுப்பிக்கப்படும்.

### 3.3.4. மறுமணம் செய்த துணைக்கான கொடுப்பனவு.

13/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்று நிருபத்தின் படி மறு மணம் செய்த ஓய்வூதியம் பெறும் துணைக்கு அச்சந்தர்ப்பத்தில் 50 % விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு உரித்தைப் பெறுகிறார். துணை மறுமணம் செய்த போதும் பங்களிப்பாளருக்கு 26 வயதிலும் குறைந்த (அனாதைக்கான வயதெல்லை) திருமணமாகாத தொழிலற்ற பிள்ளைகள் இருப்பின் அவர்களுக்கு அனாதைக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் அவ்வாறு பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் மறு திருமணம் செய்த துணைகள் 50 % விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு உரித்தைப் பெறுகிறார்கள்.

பிரதெச செயலகங்களில் இயங்கலைத் தரவுத் தளத் தொகுதியில் துணையின் தகவல்களைப் பதிவேற்றம் செய்யும் வசதிகள் ஓய்வூதியத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன் பதிவிடப்படும் தகவல்கள் ஆய்வு செய்யப்படுகிறது. ஓய்வூதியத் திணைக்களத்தின் கணக்குக் கிளையால் வெவ்வேறு வகைப்படுத்தலூடாக முதற் கொடுப்பனவுகளுக்கான நிதி நடவடிக்கைகள் கையாளப்படுவதுடன் ஏனைய செயன்முறைகள் ஏற்கனவே விபரிக்கப்பட்ட முதற் கொடுப்பனவு முறைபோன்றே மேற் கொள்ளப்படும்.

தனிப்பட்ட தரவுத்தளத் தொகுதியினூடாக விதவைகள், தபுதாரர்கள் ஓய்வூதிய மற்றும் அனாதைகள் , ஊனமுற்றோர் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நடைமுறைப் படுத்தப்படுவதுடன் ஓய்வூதிய முதற் கொடுப்பனவை போன்றே இயங்கலைத் தொகுதியூடாக நிதி நடவடிக்கைகள் கையாளப்படுவதுடன் முதல் கெடுப்பனவுச் செயன் முறை ஒரு தனிப்பட்டசெயன் முறையாக செயற்படுத்தப்படுவதுடன் இங்கு பராமரிக்கப்படுவதில் மாதாந்த கொடுப்பனவுத் தொகுதியில் பிரதேச செயலகத்திலிருந்து பெறப்படும் தகவல்களை தொடர்ந்தும் புதுப்பிப்பதனூடாக தொடர்ந்தும் கொடுப்பனவுகள் பராமரிக்கப்படும்.

## 04. வழங்கப்பட்ட நன்மைகளைக் கையாள்தல்

ஓய்வூதியத் திணைக்களத்தின் முதன்மைக் கடமை முதற் கொடுப்பனவுகளைச் செய்வதுடன் முதற் கொடுப்பனவு முறை தவிர்ந்த வாழ் நாளில் வழங்கப்படும் நன்மைகளைக் கையாள்தலும் ஆகும். அரச நிறுவனங்களால் கொடுப்பனவு செய்தல் மற்றும் பங்களிப்பை மீள்கொடுப்பனவு செய்தல் ஆகியவையும் அடங்கும்.

### 04.1. பங்களிப்புகளில் பயனாளிகளிற்கான நன்மைக் கொடுப்பனவுகள்

அரச சேவையில் இணைக்கப்பட்டிருக்கும் காலகட்டத்தில் அரசாங்கத்துடன் பிணைக்கப்பட்டிருப்பதுடன் ஊதியத்தின் குறிப்பிட்ட தொகை பங்களிப்பாக வழங்கப்படுவதுடன் கொடுப்பனவு செய்யவேண்டிய தொகையாக ஒருவருக்கு சொந்தமான நிதி மற்றும் முடிவடையும் கடன் வட்டி ஆகியவற்றுடன் இரண்டு கொடுப்பனவு நிலமைகள் அதற்கமைய ஓய்வூதியத்தின் விடயப்பரப்பின் கீழ் பின்வரும் பிரிவுகள் கொண்டுவரப்படும். அவையாவன, பொதுச் சேவை நம்பிக்கை நிதிய நலனொன்புக் கொடுப்பனவு மற்றும் விதவைகள் தபுதாரர் மற்றும் அனாதைகள் மீள்கொடுப்பனவு ஆகிவையாகும்.

#### 4.1.1 விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் மீள்கொடுப்பனவு

உரித்துரிமையற்ற நிலமை மற்றும் பயனாளிகள் இல்லாமை ஆகியவற்றின் காரணமாக இறந்தவரின் வாரிசுகளிற்கு அல்லது பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட பங்களிப்பை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மணம் முடிக்காத, பிள்ளைகள் அற்ற தபுதாரர் மற்றும் விவைகள், குழந்தைகள் அற்ற மணவிலக்குப் பெற்றவர்கள் (நிரந்தரமாக) அகிய பிரிவினர் அரச சேவையை முடிவுறுத்தும் சந்தர்ப்பத்தில் எத்தினத்திலிருந்து பங்களிப்பு அறவிடப்பட்டதோ அத்தினத்தி லிருந்தான பங்களிப்புத் தொகை 2.5 % வட்டி அடிப்படையில் மீள் கொடுப்பனவு செய்யப்படும்.

மேலும் பங்களிப்பாளரது துணை இறந்திருப்பின் 26 வயது நிரம்பிய இளைய பிள்ளை தொழிலில் ஈடுபட்டுள்ள இளைய பிள்ளை ஆகியோருக்கு அத்தினத்திலிருந்து ஓய்வூதிய உரித்தற்ற அரச சேவையில் முடிவுறுத்தப்பட்ட நிலையில் மொத்தமாக அறவிடப்பட்ட பங்களிப்பு மீளச் செலுத்திவதற்கு ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் மீள்கொடுப்பனவு மூன்று கட்டச் செயன் முறையூடாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. பங்களிப்பாளரது

ஓய்வூதியத் திகதிக்கமைய கொடுப்பனவு முன்னெடுக்கப்படும்.

பங்களிப்புக் கொடுப்பனவுச் செயன் முறைக்கு 2015.01.01 ஆம் திகதிக்கு முன்பாக வேண்டுதல் விடுக்கும் சந்தர்ப்பத்தில் நீடிக்கப்பட்ட செயன் முறையாக்கலாம். கூறப்பட் செயன் முறை, முன்பு ஓய்வூதியம் பெற்றோர்கள் தமது பங்களிப்பு மீள் கொடுப்பனவுக்கான வேண்டுகோளை முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் நிறுத்தப்பட்ட இறந்த அலுவலருக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

அதனால், பங்களிப்பாளர் ஓய்வூதிய திணைக்களத்திற்கு வருகை தருவதன் மூலமோ தபாலூடாகவோ தமது பங்களிப்பை மீளப்பெறும் கோரிக்கையை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் ஓய்வூதியத் திணைக்களம் தனது செயல் முறைகளை ஆரம்பிப்பதுடன் அவ்வோய்வூதியர் இறுதியாகக் கடமையாற்றிய அல்லது முழுமையான ஆய்வின் பின்னர் உரிமை பெற்ற விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் கோவையைக் கொண்டுள்ள நபருக்கு அஞ்சலூடாக அனுப்பிவைக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்டு முழுமையாக ஆய்வு செய்யப்பட்ட பின்னர் கணிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிப்படத்தப்பட்டு பொருத்தமான நிதி வழங்கப்படும்.

2015.01.01 தொடக்கம் 2015.10.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்ற விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் கொடுப்பனவு வழங்கப்படுவோர் மேற் கூறப்பட்ட கொடுப்பனவுச் செயல் முறையைத் தவிர்த்து வெறொரு செயன் முறையின் கீழ் உள்வாங்குதல். அதன்படி உரித்துடையவர் முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தான் இறுதியாக சேவையாற்றிய நிறுவனத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்நிறுவனம் அப்பங்களிப்பாளரின் தொடர்புடைய கோவைகள் மற்றும் தரவுகளை ஆய்வு செய்து கொடுப்பனவுகளை உறுதிப்படுத்திய பின்னர் பங்களிப்பாளருக்கான கொடுப்பனவை மேற்கொள்ளும். மெற்படி நிதியை ஓய்வூதியத் திணைக்களம் மீள் நிரப்பும். இம்மொத்தச் செயன் முறையும் மூன்று வார காலத்தினுள் அல்லது அதனிலும் குறைந்த காலத்தில் செயற்படுத்தப் படுவதுடன் வினைத்திறன் மிக்க முறையில் பங்களிப்பாளருக்கான நிதி வழங்கப்படும்.

தற்போது, 2015.11.01 ஆம் திகதியிலிருந்து ஓய்வூதியம் பெற்றுள்ள விதவைகள், அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பாளர்கள் அதை மீளப் பெறுவதற்கான தங்களது கோரிக்கையை ஓய்வூதியப் பதிவு செய்தலின் போது படிவம் PD3 இன் IV ஆம் பகுதியில் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

அதன் பின் விண்ணப்பத்தின் மேற் கூறப்பட்ட பகுதிகளை பூரணப்படுத்தி அத்துடன் திருமண நிலையைக் குறிப்பிட்டு பிரதேச செயலரது உறுதிப்படுத்தலுடன் வருடாந்தப் பங்களிப்பு மீட்டெடுப்பு தகவல் அடங்கலாகக் கொடுப்பனவு செய்யவேண்டிய உரித்துத் தொகைகான கணிப்பிடப்பட்ட வட்டி அகியவற்றின் பிரதி அடங்கலாக அனைத்து ஆவணங்களையும் 2/2015 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்று நிருபத்திற் குறிப்பிடப்பட்ட பின்னிணைப்புக்களுடன் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும், அத்தாட்சிப் படுத்தப்பட்ட மரணச் சான்றிதழ், இறுதித் தீர்ப்புத் தாள் , இறுதிப் பிள்ளையின் பிறப்பத்தாட்சிப் பத்திரம் மற்றும் இறுதிப் பிள்ளையின் நியமனக் கடிதம் அகிய தகவல்கள் ஆய்வு செய்யப்படும்.

பங்களிப்பாளர்கள் மீளப் பெறுவதற்கான தங்களது கோரிக்கை தொடர்புடைய தகவல்களை ஆய்வு செய்தற் பொருட்டு விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் கோப்பு பதிவேடைறையில் இருந்து பெறப்படும். இயங்கலையில் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் பெற்றுக் கொண்டோர் உருவாக்கப்பட்ட இயங்கலை தரவுத்தளத் தொகுதியினூடாக தகவல்களைப் பரீட்சித்த பிற்பாடு பதிவிறக்கம் செய்யப்பட்ட பிரதிகளைக் கொண்டு கோப்பு உருவாக்கப்படும். உருவாக்கப்பட்ட கோப்பை ஆய்வு செய்து பங்களிப்பு துல்லியமாக கணிப்பிடப்படுவதுடன் காசோலை பங்களிப்பாளரது வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படும். நிறுவனம் பங்களிப்பாளருக்கு இது தொடர்பில் கடித மூலம் அறிவித்தல் வழங்கும்.

இரட்டைக் கொடுப்பனவை தவிர்க்கும் பொருட்டு பதவிநிலை அலுவலர்களால் கணக்கட்டைஇ பொது 86, அல்லது பொது 86 “அ” ஆகியவை அடங்கலாக அனைத்து ஆவணங்களிலும் “பணம் செலுத்தப்பட்டது” எனும் முத்திரை பதிக்கப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்படுவதுடன் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்களிப்பாளராயின் காசோலை மற்றும் கணக்காய்வு அறிக்கை ஆகியவை ஸ்கேன் செய்யப்பட்டு தரவேற்றம் செய்யப்படும். கொடுப்பனவு ஆவணங்கள் பராமரிக்கப்படும் போது தரவுத்தாள் தொகுதியில் இரட்டைக் கொடுப்பனவைத் தடுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

### 4.1.2. பொதுச் சேவை நம்பிக்கை நிதிய நன்மைக் கொடுப்பனவு

1942 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க பொ.சே.ந.நிதிய கட்டளைச் சட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெறும் அலுவலர்களுக்கு இறுதிக்கொடுப்பனவு நன்மைகள் ஓய்வூதியத் திணைக்களத்தால் தாபிக்கப்பட்டு பொதுச் சேவை நம்பிக்கை நிதிய கிளையால் வழங்கப்படுகிறது.

பொதுச் சேவை நம்பிக்கை நிதியத்தில் பதிவு செய்த அங்கத்தவர்கள் பொதுச் சேவை நம்பிக்கை நிதிய கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய அமய நியமனத்திலிருந்து ,ஓய்வூதிய உரித்தற்ற சேவையை முடிவுறுதல், சேவைக்கு உள்ளீர்த்தல் சேவையை விட்டு விலக்கல் ஆகியவற்றில் நிரந்தர நியமனம் பெறும் சந்தர்ப்பத்தில் பொதுச் சேவை நம்பிக்கை நிதிய (பொ.சே.ந.நி) நன்மைகளைப் பெறமுடியும். மேலும் ஓய்வூதிய உரித்தற்ற அலுவலகர் மரணமடையும் சந்தர்ப்பத்தில் அவரது பின்னுரித்தாளருக்கு பொ.சே.ந.நி

பயன்கள் கிடைக்கப்பெறும். அக்கொடுப்பனவுகள் பொ.சே.ந.நி கட்டளைச்சட்டத்தின் மூன்று பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் பொ.சே.ந.நி கட்டளைச் சட்ட 14 ஆம் பிரிவின் படி 60 வயதைப் பூர்த்தியாக்கி சேவையில் இருந்து முடிவுறுத்தப்பட்ட அமைய, பிரதியீட்டு அல்லது ஒப்பந்த அடிப்படையிலான அரச அலுவலர்களுக்கு நன்மைகள் வழங்கப்படும். அதனையடுத்து பங்களிப்பாளர்களுக்கு கட்டாய பங்களிப்புத் தொகை, அரச ஊக்கத்தொகை அவைக்கான வட்டிகள் அடங்கலாக செலுத்தப்படும்.

ஒழுக்காற்று நடவடிக்கையின் காரணமாக சேவைநீக்கம் செய்யப்பட்ட அல்லது வெளியேற்றப்பட்ட அலுவலர்களுக்காக பிரிவு 16 அமுல் படுத்தப்படுகிறது. அவ்வாறான பங்களிப்பாளர் கட்டாய பங்களிப்பு தொகை மற்றும் அதன் வட்டி ஆகியவற்றை பெறுவதற்கு மட்டுமே தகுதியுடையவராகிறார். மேலும் இக்கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் எவரொருவர் அமைய, பதிலீட்டு அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி நிரந்தர நியமனம் பெறுகிறாரோ அவர் தொடர்பிலான நன்மைக் கொடுப்பனவாக கட்டாய பங்களிப்பு மற்றும் வட்டி ஆகியவை மட்டுமே வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வட்டி அற்ற பங்களிப்பை மீளப்பெறுவதற்கு அப்பால் பங்களிப்பாளருக்கு தவறான மீட்டெடுப்புக்கள் செலுத்தப்படும் சந்தர்ப்பமும் காணப்படும்.

பங்களிப்பாளருக்கு வட்டி வழங்கப்படும் போது பொ.சே.ந.நி முதலீட்டில் இருந்து பெறப்படும் வட்டியின் வீத அடிப்படையிலேயே வட்டி முடிவெடுக்கப்படுகிறது. பங்களிப்பாளருக்கு நன்மைகளை வழங்கும் போது பொருத்தமான வட்டி வீதம் கணிக்கப்படுவதால் கொடுப்பனவு செய்யப்படும். அதற்கமைய 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12.34% வட்டியாக கணிக்கப்பட்டது. இன்று வரையான காலத்தில் இதுவே மிக உயர் வட்டி வீதமாகும்.

பங்களிப்பாளர் பொ.சே.ந.நி நன்மைகளுக்கு விண்ணப்பிக்கும் போது இறுதியாக கடமை புரிந்த நிறுவனத்தினூடாக PD P1 P மற்றும் PD P2 P படிவங்களைப் பூரணப்படுத்தி விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பித்த பங்களிப்பாளருக்கு பொ.சே.ந.நி கிளையினால் கோவை ஒன்று திறக்கப்படுவதுடன், பிரிவு இலக்கத்தின் கீழ் கணணி மயப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கை முகப்பு அறிக்கையுடன் ஒப்பிடப்பட்டு ஆய்வு நடத்தப்படும்.

பிரதேச தலைவர், செயலாளர், கணக்காளர் ஆகியோரது கண்காணிப்புடன் நன்மைக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. நிரந்தர நியமனம் பெற்ற பயனாளிகளின் கொடுப்பனவுகள் மற்றும் அரசுக்கான மீட்டெடுப்புக்கள் காசோலையூடாக கொடுப்பனவு செய்தற் பொருட்டு தொடர்புடைய நிறுவனத்திற்கு அனுப்பப் படும். வங்கியில் அஞ்சலூடாக கொடையளிப்புத் தாள் பங்களிப்பாளருக்கும் நிறுவனத்திற்கும் அறிந்திருத்தற் பொருட்டு அனுப்பிவைக்கப்படும். கணக்காய்வில் அங்கத்துவப்ப பதிவுப் புத்தகத்தில் இரட்டைப் பதிவைத் தடுத்தற் பொருட்டு அங்கத்துவ இலக்கத்தின் முன்பாக கொடுப்பனவு வழங்கப்பட்டது தொடர்பில் குறிப்பொன்று சேர்க்கப்படும். 2017 ஆம் ஆண்டில் மேற்கூறிய செயல்முறைகளை இயங்கலைத் தரவுத்தள தொகுதியினூடாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**04.2. வழங்கவேண்டிய அரசாங்க கொடையளிப்புக்களைக் கையாளல்.**

அரசாங்கத்தால் ஒழுங்காக்கப்படும் சேவைக்கால முடிவில் வாழ்க்கைக் காலத்தில் வழங்க வேண்டிய அரசாங்க கொடையளிப்புக்களைக் கையாழுதலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் முக்கிய பணியாகும். மேற்கூறப்பட்டதன் கீழ் பல வகையான கொடையளிப்புக்கள் செலுத்தப்படுகின்றன.

விளக்கப்படம் 08




அட்டவணை - 08

| வங்கி | சம்பளம் பெறும் தொகை (மில்) 2015 | சம்பளம் பெறும் தொகை (மில்) 2016 |
|---|---|---|
| மக்கள் வங்கி சேகரிப்பு | 4,162.64 | 5,839.82 |
| இலங்கை வங்கி | 3,700.77 | 4,740.43 |
| தேசிய சேமிப்பு வங்கி | 1,878.91 | 2,400.92 |
| **மொத்தம்** | **9,742.31** | **12,981.17** |

மூலம் – வி.அ.ஓ பிரிவு

விளக்கப்படம் 09




அட்டவணை - 09

| மாதம் | மரணப் பணிக் கொடை | திருத்தப்பட்டமரணப் பணிக்கொடை |
|---|---|---|
| ஜனவரி | 81 | 6 |
| பெப்ரவரி | 80 | 6 |
| மார்ச் | 85 | 14 |
| ஏப்ரல் | 88 | 12 |
| மே | 75 | 23 |
| ஜூன் | 72 | 14 |
| ஜூலை | 82 | 14 |
| ஆகஸ்ட் | 112 | 26 |
| செப்டம்பர் | 107 | 23 |
| ஒக்டோபர் | 122 | 18 |
| நவம்பர் | 86 | 27 |
| டிசம்பர் | 86 | 25 |
| **மொத்தம்** | **1076** | **208** |

மூலம் - பதிவிடற் பிரிவு

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற அலுவலர்கள் தமது ஒப்புதலை வெளியிடுவதன் மூலம் ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெறுவதற்கு உரித்துடையவராகிறார். அடிப்படை ஓய்வூதியத்தின் 24 மடங்கு பணிக்கொடையாகக் கணக்கிடப்பட்டு அத்தொகையைப் பெறும் உரித்தை அலுவலர் கொண்டுள்ளதுடன் பதிவு செய்தலின் ஒரு பகுதியாகவே இயங்கலை பதிவு செய்யும் நடவடிக்கையுடன் ஆரம்பமாகும், பதிவு செய்தலின் பகுதிகளாகவே பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் ஆகியவை வழங்குலும் உள்ளன. பணிக்கொடை அவரது வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படும். தொடர்புடைய வங்கிகளுக்கு தனிப்பட்ட காசோலை வழங்குவதற்கு பதிலாக ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவு பட்டியலுடன் ஒரு காசோலையாக வழங்குவதன் மூலம் இக்கொடுப்பனவு விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர ஓர் அலுவலர் அரச சேவையில் சேவையாற்றுகையில் இறந்தால் அவரைச் சார்ந்து வாழும் பயனாளிக்கு அவர் இறந்த திகதியை ஓய்வூதிய திகதியாகக் கருதி அல்லது அலுவலரது வருடாந்த சம்பளத்தை பணிக்கொடை தவிர்த்து உயர் பெறுமதியாகக் கருத்திற் கொண்டு மரணப் பணிக்கொடையாகச் செலுத்தப்படும். தங்கிவாழ்வோரிடமிருந்து பூரணப்படுத்தப்பட்ட PD6 பெறப்படுவதுடன் பதிவிடல் கிளையால் தரவுத்தள தொகுதியில் பதிவிடப்படும் தகவல்களுடன் தங்கிவாழ்வோருக்கு அவர்களது வங்கிக் கணக்கிற்கு கொடுப்பனவு வரவிடப்படும். முன்பு செயற்படுத்தப்பட்ட மரணப் பணிக்கொடை கொடுப்பனவுச் செயல்முறையின்படி தொடர்புடைய நிறுவனம் பணிக்கொடையை வழங்குவதுடன் அதன் நிதி மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்பட்டது. நேரடியாக கொடுப்பனவுப் பணத்தை வழங்குவதன் மூலம் நேர விரையம் தடுக்கப்படும்.

மேலும் 120 மாத சேவைக்காலத்தை கொண்டிராத ஓய்வு பெறும் அலுவலர்களுக்காக சேவைப்பணிக்கொடை வழங்கப்படுகிறது. அத்துடன் அவசர கால நிலைமைகளில் அல்லது இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந்த அல்லது ஊனமுற்ற அரச அலுவலர்களுக்கு அல்லது அவர்களைத் தங்கி வாழ்வோருக்காக அவர்கள் வாழ்க்கைக் காலத்தில் ஒரு தடவை விசேட இழப்பீட்டு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

சேவைப்பணிக்கொடை நேரடியாக குறித்த பயனாளியின் வங்கிக் கணக்கில் வைப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் விசேட இழப்பீட்டு கொடுப்பனவு வழங்கும் செயல்முறை தற்போதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இக்கொடுப்பனவுகளும் இயங்கலைத் தரவுத்தளவாயிலாக நடைமுறைப்படுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 10**



அட்டவணை - 10

| பணிக்கொடை | தொகை (ரூ மில்லியன்) |
|---|---|
| சிவில் | 8657 |
| இராணுவ சேவை | 4958 |
| கணிப்பு பிரிவு | 381 |
| மரணம் | 330 |
| ஏனைய | 1065 |
| மொத்தம் | **15391** |

மூலம் - **கணக்கு பிரிவு**

## 5. வெளிநாட்டு ஓய்வூதியக் கொடுப்பனவைக் கையாள்தல்

வெளிநாடு சென்று மூன்று வருடங்களுக்கு மேலாக அங்கு வசிப்பவர்களது ஓய்வூதிய வழங்கல் செயல்முறை வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையால் கையாளப்படுகின்றது.

03/2016 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்று நிருபத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய மூன்று வருடங்களுக்கு மேலதிகமாக வெளிநாடுகளில் வசித்து வருவோருக்கான ஓய்வூதியம் பிரதேச செயலகங்களில் இருந்து பெறும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து காயலை (skype) தொழில் நுட்பத்தினூடாக தமது உயிர் வாழ் சான்றிதழை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

தோடர்புடைய பிரதேச செயலகங்களில் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளைக்கு மூன்று வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் தொடர்பிலான விபரங்கள் ஓய்வூதியத் திணைக்கள வலைத்தளப்பக்கத்தில் உள்ள பொருத்தமான விண்ணப்பப் படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலும் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளைக்கு அறிவித்தல் வழங்காது, பிரதேச செயலகத்தில் வழங்கி வெளிநாடுகளிற்கு சென்ற ஓய்வூதியர்களது ஓய்வூதியம் அவர்கள் வசிக்கும் நாட்டிற்கு அனுப்புவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட கொடுப்பனவுக்கு வெளிநாட்டு ஓய்வூதிய வலைத்தளத்தில் காணப்படும் விண்ணபத்ததை பூரணப்படுத்தி அந்நாட்டின் உயர்ஸ்தானிகராலயப் பணியக அலுவலரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளைக்கு அனுப்புதல் வேண்டும்.

4 உள்நாட்டு வங்கிகளூடாகவே கொடுப்பனவு செய்யப்படும் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையால் வெளிநாட்டு ஓய்வூதியருக்கான ஓய்வூதியம் அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமேரிக்கா, இந்தியா மற்றும் ஐக்கிய இராட்சியம் ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலய பணியக அலுவலர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவை நான்கு உள் நாட்டு வங்கிகளுடன் இணைந்து கொடுப்பனவு செய்யப்படும். எவ்வாவறெனினும், 2016 ஆம் ஆண்டில் அன்னியச் செலாவாணி ஓட்டத்தை குறைப்பதற்கும் குறிப்பிட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வோர் தவிர்ந்த வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்களது ஓய்வூதியம் உள்நாட்டு வங்கிகளூடாக செலுத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டதால் வெளிநாட்டு கொடுப்பனவுகள் வெளிநாட்டு பணியகத்தால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஓய்வூதியத்தை ஓர் வெளிநாட்டு ஓய்வூதியர் இலங்கை வங்கி மெற்றோபொலிற்றன் கிளை, மக்கள் வங்கி குயின்ஸ் கிளை, பான் ஏசியா வங்கி பொறல்ல கிளை, ஹற்றன் நசனல் வங்கி மாளிகாவத்தைக் கிளை ஆகியவற்றினூடாக பெறமுடியும் அத்துடன் இவை தொடாபில் விபரங்கள் திணைக்கள வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

ஓவ்வொரு வருடத்திற்கும் (மார்ச் 31 இற்கு முன்) உயிர் வாழ் சான்றிதழ் அவ்வருடம் ஆரம்பிக்கும் முன்பாகவே ஓய்வூதியர் வதியும் நாட்டு உயர்ஸ்தானிகாராலய அலுவலரின் அத்தாட்சிப்படுத்தலுடன் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது உயிர் வாழ் சான்றிதழ் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு ஓய்வூதியர் இணையுடன் காயலை (skype) ஊடான நேர்காணலின் மூலம் சமர்ப்பிக்க முடியும். கையொப்பம் மற்றும் அவரது புகைப்படம் ஆகியவை காயலை (skype) ஊடாக பெறப்படும். காயலை (skype) ஊடாக உயிர் வாழ் சான்றிதழ் பெற்றோர் தரவுத்தள தொகுதியில் பதிவிடல் வேண்டும். அத்துடன் இது ஓய்வூதியரால் வேண்டுகோள் விடுக்கப்படும் போது அடையாளத்தை உறுதிப்படுத்த உதவும்.

2016 இல் வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுவோருக்கான கோவைகளைப் பாதுகாக்க ஒழுங்காக்கப்பட்ட பதிவேட்டறை கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதன் மூலம் கோவைகளைத் தேடும் பணி சிறப்பாக நடைபெற்றுகிறது. ஓய்வூதியருக்கு நேரிடையாக ஓய்வூதியம் வழங்கும் பணி தோடர்ந்தும் அமுலில் உள்ளது. பழைய நடைமுறையான ஓர் ஓய்வூதியர் வெளிநாடு சென்றிருப்பின் அவர் பிரதேச செயலகத்தில் அறிவித்தல் தந்த பிற்பாடு அவரது கோவையை அனுப்பிய பின்னர் மீண்டும் நிலுவைகளுடன் ஓய்வூதியம் ஆரம்பிக்கும் இன் நடைமுறைக்குப் பதிலாக 2016 ஆம் ஆண்டில் வெளிநாடு ஓய்வூதியக் கிளைத் தரவுத்தளத்தினூடாக சுயமாக வெளிப்படைத்தன்மையுடன் ஓய்வூதியம் வழங்கும் செயற்பாடானது ஓய்வூதியர் வெளிநாட்டில் இருக்கும் போதும் மத்திய தரவுத்தளத்தினூடாக மேலும் பயனுள்ளதாகசெயற்படுகிறது.

## 06. திரட்டிய நிதி உட்பாய்ச்சல்

2016 இல் பங்களிப்பு நிதி , கட்டட வாடகை, விடுமுறை விடுதி வருவாய் ஆகியவற்றில் கிடைக்கும் வருவாயை கையாள்தல் தொடர்பில் திணைக்களம் முதன்மைப் பொறுப்பைக் கொண்டுள்ளது.

### 6.1 விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியைக் கையாளுதல்.

1898 இன் 01 ஆம் இலக்க விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு சட்டம் மற்றும் 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு சட்டம் ஆகியவற்றின் மூலம் சிவில் அரச அலுவலர்களும் , 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் பிரிவின் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு சட்டம் (ஆயுதப்படை) , 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் பிரிவின் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு சட்டம் (ஆயுதப்டை) ஆகியவற்றின்மூலம் ஆயுதப்படை அலுவலர்களும் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் நிதியத்திற்கு தகுதியானவர்கள் ஆகின்றனர். அதன்படி அடிப்படை மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்களிடமிருந்து 6 % மான தொகையும், மூன்றாம் நிலை மற்றும் சிரேஸ்ட அலுவலர்களிடமிருந்து 7 % மான தொகையும் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதிக்கு அறவிடப்படுகிறது. மேற் கூறப்பட்ட தொகை மத்திய அரச நிறிவனங்களால் வரவுக் குறுப்பினூடாக பொதுத் திறை சேரிக்கு வரவிடப்படுவதுடன் மாகாண அரச நிறிவனங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்குக் காசோலை மூலம் செலுத்துகின்றன. இந்நிதி விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு மீளச் செலுத்துகைக்கு பயன் படுத்தப்படுகிறது.

**விளக்கப்படம் 11**



அட்டவணை - 11

| மாகாணம் | வருமானம் (மில்) 2016 |
|---|---|
| மேல் மாகாணம் | 1,296.01 |
| தென் மாகாணம் | 772.03 |
| மத்திய மாகாணம் | 815.47 |
| ஊவா மாகாணம் | 483.38 |
| சப்பிர கமுவ மாகாணம் | 551.82 |
| வடமேல் மாகாணம் | 787.87 |
| வட மத்திய மாகாணம் | 428.49 |
| வட மாகாணம் | 473.61 |
| கிழக்கு மாகாணம் | 480.45 |
| மொத்தம் | 6,089.14 |

மூலம் - **கணக்குப்** பிரிவு

## 6.2 பொதுச்சேவைப் நம்பிக்கை நிதியப் பங்களிப்பைக் கையாள்தல்.

1942 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பொதுச்சேவைப் நம்பிக்கை நிதியத்திய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பங்களிப்பாளராகப் பதிவு செய்து கொண்டவர் தமது சம்பளத்தின் 8 % கட்டாய பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அத் தொகை அலுவலர் கடமையாற்றும் நிறுவனத்தால் அறவிடப்பட்டு ஒவ்வொரு மாதமும் 8 ஆம் திகதிக்கு முன்னர் காசோலை மூலம் ஒய்வூதியத் திணைக்களத்தின் பொதுச்சேவைப் நம்பிக்கை நிதியத்தியத்திற்கு அனுப்பப்படும். மேற் கூறிய தொகை தவிர 12 % அரச பங்களிப்பாக காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படுவதுடன் இவ் அனைத்து காசோலைகளும் பொதுச்சேவைப் நம்பிக்கை நிதியத்தின் கணக்கில் வரவிடப்படும். மேற் குறுப்பிட்ட வருவாயில் இருந்தே பொதுச்சேவைப் நம்பிக்கை நிதியத்திய கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதுடன் மீள் கொடுப்பனவுக்கு தேவைப்படும் தொகை தவிர்ந்த ஏனைய தோகை முதலீடு செய்யப்படும். இம் முதலீடானது பணிப்பாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் திறைசேரி பிணைகள் மற்றும் முறிகள் ஆகியவற்றை கொள்வனவு செய்தல் மற்றும் நிலையான வைப்பிலிடல் போன்ற வடிவத்தில் முதலீடு செய்யப்படும். அப்பெறுகைகள் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட குறியீட்டு இலக்கங்களின் மூலம் காசோலையூடாக வகைப்படுத்தப்பட்டு நிறுவனங்களால் அனுப்பப்படும் பங்களிப்புக்களால் சட்டபூர்வமாக கையாள முடிவதுடன் இது நிதிக் கையாள்கைக்கு இலகுவாகிறது.

## 06 .3 கட்டட வாடகையைக் கையாள்தல்

ஒய்வூதிய திணைக்களத்தில் இயங்கும் கட்டடங்கள் நிலப்பரப்பு தவிர்ந்த எஞ்சிய பகுதிகள் மாதாந்த வாடகைக்கு 16 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 12**




**அட்டணை 12**

| நிறுவனத்தின் பெயர் | கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கிய % | கட்டிட வாடகை |
|---|---|---|
| ஆயுர்வேத ஔடத கழகத்தின் | 0.42 | 100,000 |
| ஹைலேண்ட் பால்ப்பொருள் உற்பத்தி நிலையம் | 0.48 | 115,500 |
| சம்பத் வங்கி A T M | 1.03 | 246,000 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 8.30 | 1,980,000 |
| ஹற்றன் நஷனல் வங்கி ATM | 1.01 | 240,000 |
| பொது சேவை ஓய்வூதிய அறக்கட்டளை நிதியம் | 0.50 | 120,000 |
| சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம் | 14.33 | 3,420,000 |
| லங்கா மருத்துவமனை (தனியார்) நிறுவனம் | 1.51 | 360,000 |
| புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 6.11 | 1,457,951 |
| மோட்டார் போக்குவரத்து மாகாண ஆணையாளர் அலுவலகம் | 32.69 | 7,800,000 |
| சிற்றுண்டிச் சாலை | 1.51 | 360,000 |
| காணி திணைக்களம் (மே.மா.) | 12.57 | 3,000,000 |
| சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் (மே.மா.) | 15.84 | 3,780,000 |
| பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் பகுதி II | 3.27 | 780,000 |
| அரச அச்சுக் கூட்டுத்தாபனம் | 0.42 | 100,000 |
| | 100.00 | 23,859,451 |

மூலம் – நிர்வாகப் பிரிவு

### 6. 4. ஓய்வூதிய விடுதியின் மூலமான வருவாய்

3.0575 ஹெக்ரெயர் பரப்பளவில் ஓய்வூதியத் திணைக்களத்தால் உருவாக்கப்பட்ட வெதமுல்ல ஓய்வு விடுதியை ஓய்வூதிய சமூகம், அரச சமூகம் மற்றும் தனியார் சமூகம் ஆகியோருக்கு வாடகைக்கு வழங்கப்படுவதன் மூலம் வருவாயைப் பெறுகிறது.

இங்கு தளத்தில் 18 அறைகளும் மேல்தளத்தில் 4 தனியறைகளும் 3 இரட்டை வீடுகளும் மற்றும் "மித்து பியச" அத்துடன் சிறப்பாக இயங்கும் கேட்போர் கூடம், பிரதான வரவேற்பறை, சாப்பாட்டு அறை மற்றும் தோட்டம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதுடன் இது வாடகைக்கு வழங்கப்படுகிறது. அரச அலுவலருக்கு வேறுபட்ட செயன்முறையூடாகவும் பொ.நி. அமைச்சு செயலாளர் அனுமதியுடன் ஓய்வூதியர் சமுதாயத்திற்கு சாதகமான விலைக்கு இச்சேவை வழங்கப்படுவதுடன் இதற்கு வழங்கும் சேவைக்கான கொடுப்பனவு தொடர்பிலான தீர்மானம் ஓய்வூதியத் திணைக்கள கணக்காளர் தலைமையிலான குழு மூலம் தீர்மானிக்கப்படும். 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெதமுல்ல ஓய்வூதியர் விடுதியில் இருந்து ஓய்வூதியத் திணைக்களத்தினால் பெறப்பட்ட வருவாய் ரூபா. 3,012,765.56 ஆகும்.

மேலும் ரம்பொட விடுமுறை விடுதியானது 0.1427 ஹெக்ரெயர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இங்கு வெளிநாட்டவர்கள் அரச அலுவலர்கள் மற்றும் ஓய்வூதிய சமுதாயத்திற்கு வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டப்படுகின்றது. இவ்விடுமுறை விடுதியானது இரண்டு மாடிகளைக் கொண்டுள்ளதுடன் நுவரேலியாவிற்கு அண்மையில் அமைந்துள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் மனங்களைக் கவர்ந்துள்ளது. அத்துடன் 5 ஆடம்பரமான சகல வசதிகளுடன் பல்கனிகளுடன் கூடிய அறைகள் சுற்றுலாத் துறைக்கு பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

ஆனால் ரம்பொட விடுமுறை விடுதியானது ஓய்வூதியர்களுக்குக் குறைந்த வாடகைக்கு வழங்கப்படுவதுடன் அரச அலுவலர்களுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகிறது. அதன் படி ரம்பொட விடுமுறை விடுதி 2016 இல் ரூபா 498,799.52 கள் வருவாயாக ஈட்டியுள்ளது.

**அட்டணை 15**

| ஓய்வு விடுதி | வருவாய் (ரூ) |
|---|---|
| களனி ஓய்வு விடுதி | 3,012,765.56 |
| ரம்பொட ஓய்வு விடுதி | 498,799.52 |
| **முழு மொத்தம்** | **3,511,565.08** |

மூலம் – நிர்வாகப் பிரிவு

## 07. உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் இலக்கு மற்றும் குறிக்கோள் ஆகியவற்றை சரிவர நிறைவேற்றுவதற்கு வளங்களின் பயன்பாடு சரியாக உள்ளதை உறுதிப்படுத்தி அமைச்சு மற்றும் திணைக்களத்தின் சுற்றுநிருபங்களுக்கு அமைய ஓய்வூதியர், துணைவர் , அனாதைகளுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது நிறுவன நிதி சரியாகப் பயன்படுத்தப்படுவதை வலியுறுத்தும் நோக்கில் பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் மற்றும் அமைச்சு ஆகியவற்றின் கொடுப்பனவு அமைப்பானது உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்றது. இதன் விளைவாக துல்லியமானதும் வெளிப்படைத்தன்மை கொண்டதுமான கொடுப்பனவுத் தொகுதி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

2016ம் ஆண்டு நடாத்தப்பட்ட கணக்காய்வில் 08 பிரதேச செயலகங்கள் விஷேட ஆய்வுகள் 07 திணைக்கள உள்ளகக் கணக்காய்வு 63 மற்றும் ஆய்வு செய்யப்பட்ட பொது முறைப்பாடுகள் 202 இல் 103 தரவு ஆய்வு செய்யப்பட்டு அதனுடன் 10 இலட்சத்தைக் கடந்த நிலுவைக் கொடுப்பனவைக் கொண்ட 650 கோவைகளிற்குமான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளும் ஆய்வு செய்யப்பட்டன.

மேலும் பிரதேச செயலகங்களிற்கு 07 கணக்காய்வு ஐயவினாக்கள் , 63 தகவல் தொகுதி ஐயவினாக்கள் மற்றும் 07 விஷேட கணக்காய்வு ஐயவினாக்களும் சமர்ப்பிக்க முடிந்தது. அதற்கு மேலும் சமர்ப்பிக்கப்ட்ட 185 அவதானிப்புக்களும் ஆய்வு செய்யப்பட்டன. 2016 இல் 98 பொது முறைப்பாடுகளுக்கு பதில்களும் அனுப்பப்பட்டன.

மேலும் கணக்காய்வுகளின் மூலம் இரட்டைக் கொடுப்பனவு தடுக்கப்பட்டதுடன் மேலதிகக் கொடுப்பனவு மீளப்பெறுவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு பெருந்தொகை சேமித்துக் கொடுத்த முடிந்துள்ளது. அதற்கமைய பிரதேச செயலக கணக்காய்வு செயற்தன்மைக்கமைவாக ரூபா 31.35 மில்லியன் கண்டறியப்பட்டதுடன் 10 இலட்சத்திற்கு மேலான நிலுவை வழங்கல்கள் செயற்பாட்டில் மேற்கொண்ட ஆய்வில் ரூபா 4.8 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு கண்டறியப்பட்டுள்ளது. தகவல் தள தொகுதி ஆய்வின் மூலம் செலுத்தப்பட்ட ரூபா 4.04 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவும், விஷேட ஆய்வின் மூலம் மேலதிகக் கொடுப்பனவு ரூபா 1.87 மில்லியன்

கண்டறியப்பட்டதுடன் 2016 இல் அரசுக்கு இத்தொகையைப் பாதுகாத்து வழங்க முடிந்துள்ளது. மேலும் தொடர்புடைய பிரதேச செயலகங்களின் மேலதிகக் கொடுப்பனவை அளவிடும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் மேற்கூறியவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் தொடர்புடைய பிரதேச செயலகங்களிற்கு வழங்குவதற்கான படிமுறைகள் அரம்பிக்கப்பட்டது.

## 08. கொள்கை முடிவுகளைப் புதுப்பித்தல்

நாடளாவிய ரீதியில் ஒய்வூதியத் துறையைக் கையாளும் ஏறத்தாழ 4000 நிறுவனங்களால் எழும் ஓய்வூதியம் தொடர்புடைய பிரச்சனைகளைக் கையாள்வதற்கும் ஓய்வூதியம் தொடர்புடைய பிரச்சனைகள் தொடர்பில் கொள்கை முடிவுகளை வழங்குவதன் மூலமும் சமீபத்திய சமூகப்பொருளாதாரச் சூழ்நலைக்கு முன்பாக முகம் கொடுக்கமுடிந்துள்ளது.

மேலும், சட்டம் ஒழுங்குத் திணைக்களம், மனித உரிமைகள் ஆணையகம், பாராளுமன்ற ஆலோசனைக் குழு மற்றும் நீதி மன்றம் ஆகியவற்றுடன் தொடர்புபடும் ஓய்வூதியம் தொடர்பான சட்டப் பிரச்சினைகள், சட்ட ஆலோனைகள், மிளாய்வு மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றையும் வழங்குவதுடன் இவ்விடயத்தின் கீழ் நிதிமன்றின் முன் சமூகமளித்தல் வேண்டும்.

மேலும் ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பில் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்வுப் பிரித்தெடுப்பு மூலம் கிடைக்கபெற்ற வேண்டுகோள்களை பயன்பாடு மற்றும் நாட்ட அடிப்படையில் ஓய்வூதிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நிர்வகிப்பதுடன் திணைக்களம் மற்றும் அமைச்சால் அமைச்சரவைப் பத்திரத்திற்கான அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒய்வூதியச் சுற்றுநிருபத்தின் ஊடாக 2016 இல் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகள் விநியோகிக்கப்பட்டன.

### சுற்றுநிருபத் திரட்டு

- **ஒய்வூதியப் பணிக்கொடை மீளப்பெறல் 01/2016– 2016.01.12**

பணிக்கொடையிலிருந்து ஒய்வு பெற்ற அலுவலர்கள் பெற்றுக் கொண்ட அரசுக்கான நிலுவைகள் தொடர்பில் நிறுவனத் தலைவர்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- **ஒய்வூதியச் சுற்றுநிருபம் 02/2016– 2016.02.08**

வி.அ.ஒய்வூதிய இலக்கங்களின் பதிவைத் திருத்தம் செய்தல்

- **ஒய்வூதியச் சுற்றுநிருபம் 9/2015(1) – 2016.02.08**

திணைக்களங்களின் ஊடாக கொடுப்பனவுகளை ஆரம்பித்தல்

- **ஒய்வூதியச் சுற்றுநிருபம் 3/2016 – 2016.04.27**

2016/01/01 ஒய்வூதியம் பெற்ற அலுவலர்களின் சம்பளத்தைச் சரிசெய்தல்

வரவு செலவுத் திட்ட மும்மொழிவின் பிரகாரம் 2016/01/01 இல் ஓய்வூதியம் பெறும் அலுவலர்களின் சம்பள ஏற்றத்தின்

அடிப்படையில் ஓய்வூதியத்தை வழங்க ஏற்பாடு செய்தல்.

- **ஓய்வூதியச் சுற்றுநிருபம் 04/2016– 2016.05.31**

வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் 2016/01/01 இல் ஓய்வூதியம் பெறுவோருக்கான புதிய காப்புறுதித் திட்டத்தை(அக்றஹார) உருவாக்கல்.

- **ஓய்வூதியச் சுற்றுநிருபம் 3/2016 (திருத்தம் 1) – 2016.06.01**

3/2016 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றிநிருபத்திற்கு மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கல்.

- **ஓய்வூதியச் சுற்றுநிருபம் 11/2014 (திருத்தம்)**

பிரதேச செயலகங்களில் இலகுவான ஓய்வூதிய செயல்முறைகளை அமுல்படுத்தல்.

- **ஓய்வூதிய சுற்றுநிருபம் 05/2016– 2016.10.21**

இணையத் தளத்தினூடாக ஓய்வூதியர்களுக்கு புகையிரத ஆணைச்சீட்டை வழங்கல்

- **ஓய்வூதியச் சுற்றுநிருபம் 06/2016– 2016.12.15**

2017 இற்கான ஓய்வூதியங்களை வழங்கல்

- **ஓய்வூதியச் சுற்றுநிருபம் 03/2015 (திருத்தம் II) -2016.09.09**

ஓய்வூதியத் திகதியில் ஓய்வூதிய நலன்களை வழங்கல்

(இணையத்தினூடாக ஓய்வூதிய விண்ணப்பம் அனுப்பல்)

- **ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் 07/2016**

பொ.நி.சுற்றுநிருபம் 06/2006 இற்கமைய (2015) ஓய்வூதியத்தைச் சீராக்கல் 2008/01/01 ஆம் திகதியில் இலங்கை வான்படையில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரமுள்ள அலுவலர்களுக்கு ஆயுதப்படை ஓய்வூதியங்களைச் சீராக்கல்.

## 09.ஓய்வூதியர்கள் பெறும் ஏனைய நனமைகள்

### 9.1 திணைக்களப் பயிற்சி நெறிகள்

இவ்வாண்டில் அரச அலுவலர்கள் எங்கெல்லாம் கட்டாயமாக இணைக்கப்படுகின்றார்களோ அவ் அரச நிறுவனங்களிற்கு ஓய்வூதியத் திணைக்களத்தில் ஏற்கனவே காணப்படும் செயல்முறை தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்படுகிறது.

அரச நிறுவனங்களிலும் திணைக்கள வளாகத்திலும் தரவுத் தளத்தினூடாக ஓய்வூதியச் செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் தரவுத் தளத்தின் பிந்திய அபிவிருத்தி மற்றும் மாற்றங்கள் தொடர்பிலும் ஆர்வமூட்டல் நடவடிக்கை போன்ற பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இணையத்தினூடாக ஓய்வூதிய விண்ணப்பம் (PD 03) வழங்கப்பட்ட பின்னர் பல நிறுவனங்களின் பங்களிப்புடன் பல ஆர்வமூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இணையத்தினூடாக புகையிரத ஆணைச்சீட்டு வழங்கும் செயற்பாடு ஆரம்பித்த போது திணைக்கத்தால் இணைக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் சேவையாற்றும் ஓய்வூதிய அலுவலர்களுக்கு விஷேட நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் நாடளாவிய ரீதியில் மாவட்டம் தோறும் பிந்திய தகவல் தொழில் நுட்ப செயன்முறை பரவலடைய வழிவகுத்தது.

பரந்தளவில் நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவு செயல்முறை தொடர்பில் விழிப்புணர்வை எற்படுத்துவதை மையமாகக் கொண்டு அரச அதிகாரிகளுக்கு திணைக்கள சிரேஷ்ட நிர்வாக அலுவலர்களால் கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன.



மூலம் – ஊடகப் பிரிவு

புகையிரதத் திணைக்கள அதிபதி காரியாலயம், பொது நிர்வாக அமைச்சு, பிரதமர் அலுவலகம், வயம்ப முதலமைச்சரின் செயலாளர் அலுவலகம், மேல்மாகாண முதலமைச்சு செயலாளர் அலுவலகம்,

கேகாலை, காலி, பதுளை மாவட்டச் செயலகங்கள், கிழக்கு மாகாண சபை,

சப்பிரகமுவா மாகாண சபை மற்றும் போக்குவரத்து அதிகார சபை ஆகிய நிறுவனங்களிற்கு புதிய பதிவிடல் முறை தொடர்பிலும் ஓய்வூதியக் கொடுப்பனவு முறை தொடர்பிலும் பல கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.



மூலம் – ஊடகப் பிரிவு

### 9.2. கடன் வசதிகள் வழங்கல்

கௌரவமான ஓய்வூதியர்களை உருவாக்கும் நோக்கில் அவர்களது நலனோம்பு, பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றைத் தரமுயர்த்தும் நோக்குடன் ஓய்வூதியத் திணைக்களம் கடந்த சில ஆண்டுகளில் பல கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து விஷேட கடன்களை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

ஓய்வூதியர்களுக்கு அரச மற்றும் தனியார் வங்கிகளூடாக வழங்கப்படும் உச்சக்கடன் தொகை ரூபா 3.5 மில்லியனாகும். சிறு மற்றும் நடுத்தர வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு ஓய்வூதியர்களுக்கு ஊக்கமளிக்கப் படுவதுடன் பல நுண் வியாபாரத்தின் உருவாக்கத்துடன் நிதிச்சுற்றோட்டம் எதிர்பார்க்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் மூலம் அரச சேவைக்கு பிரியாவிடை கூறி ஓய்வு பெற்று மீண்டும் பொருளாதார மற்றும் சேவைப்படையணியுடன் தம்மை இணைத்துக் கொண்ட செயற்படு பங்களிப்பாளர்கள் தமது நீண்ட சேவைக்கால அனுபவத்தைக் கொண்டு பொருளாதாரச் செயன்முறையில் பாரிய வெற்றி பெற்றுள்ளனர்.

ஓய்வூதியர் பெற்ற கடன் தள்ளுபடி செய்யபப்பட்டால் மொத்தக் கடனையும் இல்லாதொழித்து விஷேட காப்புறுதிக்கு ஏற்றவாறு நம்பகத் தன்மை உறுதி செய்யப்படுகிறது.

ஓய்வூதியர்களுக்கு கடன் வழங்கப்படும் போது வங்கிகளின் நடை முறைப் படுத்தப்படும் செயற்பாடுகளுக்குப் பதிலாக ஓய்வூதியர்களுக்கு சாத்தியமான உறுதிப்பாட்டுடன் அரச வங்கிகளில் கடன் பெறும் சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளது மிகப் பெரிய உற்சாகத்தை வழங்குகின்றது.

மேற்சொன்ன உற்சாகத்துடன் வங்கிகள் கடனை ஆரம்பிப்பதுடன் ஓய்வூதியரிடையேயான நம்பிக்கையை

வென்றெடுப்பதன் பொருட்டு வேறுபட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் நன்மைகளும் வழங்குகின்றன.

அரச சேவையிலிருந்து ஓர் ஓய்வூதியர் ஓய்வு பெறுகையில் அவர் தேசிய சேவையணியில் இருந்து அவரது சேவை முடிவுறுத்தப்படுவதால் ஓய்வூதியர் ஓய்வூதிய சமூகத்தின் பெறுமதி மற்றும் செயலாக்கம் ஆகியவற்றை உணர்ந்து புரிந்துணர்வை வளர்த்து அவர்களது தனிப்பட்ட வாழ்வை அபிவிருத்தி செய்யும் சந்தர்ப்பம் ஓய்வூதியத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

### 9.3. இயங்கலையில் (online) புகையிரத ஆணைச்சீட்டு ஒதுக்கீடு

இவ்வருடத்தில் ஓய்வூதிய சமூகத்தை பிந்திய தகவல் தொழில்நுட்ப உலகுடன் இணைத்து வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் வேறுபட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி ஓய்வூதியத் திணைக்கள இணையத் தளத்தினூடாக புகையிரத ஆணைச்சீட்டு வழங்கும் நடவடிக்கை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு புகையிரத ஆணைச்சீட்டு வழங்குகையில் இருந்த சிக்கலான முறைகளுக்குப் பதிலீடாக புதிய இலகுவானதான இச்செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புகையிரதத் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் இணைந்து ஆரம்பித்த இவ்விஷேட சேவையைப் பெறுவதற்கு ஓய்வூதியர் பிரதேச செயலகத்திற்கு ஒரு தடவை வருகை தருவதற்கான நடைமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



மூலம் – ஊடகப் பிரிவு

ஓய்வூதியர் இணைத்தளத்தினூடாக பதிவு செய்தல் வேண்டும். அத்துடன் அதற்கான செயல்முறைகளை பிரதேச செயலகங்கள் மேற்கொண்டு இணைய தரவுத் தளத் தொகுதியில் விபரங்களைப் பதிவிடும். இதனால் ஓய்வூதியர்கள் பிரதேச செயலகங்களுக்கு செல்லாமலேயே தமது ஓய்வூதிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி புகையிரதத் திணைக்களத்தில் தமக்கான புகையிரத ஆணைச்சீட்டை மிகக்குறைந்த காலத்தில் பெறும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. மேலும்

பதிவு செய்யப்பட்ட ஓய்வூதியர்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் புகையிரத திணைக்களம் ஆகியவற்றிற்கு செல்லாமலேயே தமக்கான புகையிரத ஆணைச்சீட்டிற்கான பதிவுகளை நேரடியாக 365 எனும் மொபிற்றல் இலக்கத்தினூடாக மேற்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் குளிரூட்டப்பட்ட, படுக்கை, அவதானிப்புப் பிரிவு அடங்கலாக இரண்டு சோடி ஆணைச்சீட்டுக்களுக்கே உரித்துடையவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



மூலம் – ஊடகப் பிரிவு

தங்கிவாழ்வோர் கொடுப்பனவு, புண்ணியாதாரக் கொடுப்பனவு, அனாதைகள் மற்றும் ஊனமுற்றோரின் பாதுகாவலர்கள் கொடுப்பனவு ஆகியவைபெறவோர் தவிர்ந்த ஏனைய ஓய்வூதியர்கள் இணையத்தளத்தினூடாக ஓய்வூதியம் பெறும் சந்தர்ப்பத்தைப் பெறுகின்றனர். ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் புகையிரத ஆணைச்சீட்டுக்கான கொடுப்பனவு ஓய்வூதியத் திணைக்களத்தால் புகையிரத திணைக்களத்திற்கு செலுத்தப்படும்.

### 9.4. அக்றஹார

2005 அண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் மூலம் அரசாங்க அலுவலர்களுக்கு அக்றஹார காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தல் மற்றும் விரிவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 12/2005(VI) ஆம் இலக்க 2016/04/29ம் திகதிய பொ.நி.சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின்படி அரச சேவையாற்றும் பங்களிப்பு செய்யும் அலுவலர்களின் சம்மதத்துடன் புதிய தங்கம். பிளற்றினம் ஆகிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் அக்றஹார திட்டத்தின் கீழ் புதிய ஒரு திட்டம் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

12/2005(VI) ஆம் இலக்க பொ.நி.சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் படி அரச சேவையில் பணியாற்றி 2016/01/01 ஆம் திகதி ஓய்வு பெற்ற அலுவலர்கள் இக்காப்புறுதிக்கு கட்டாய பங்களிப்புத் தொகையாக ரூபா 200.00 வை அவரது மாதாந்த ஓய்வூதியத்தில் இருந்து ஓய்வூதியத் திணைக்களம் அறவிட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தும்.

வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கு அவர்களது பங்களிப்புத தொகைக்கேற்ப பயன் பெறும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களது நாட்டுத் தூதரகம் இதை உறுதிப்படுத்த வேண்டும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட அக்றஹார காப்புறுதியினூடாக எண்ணற்ற நன்மைகளைப் பெறமுடிவதுடன் ஓய்வூதியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படின் விடுதி மற்றும் வைத்தியசாலைக் கட்டணங்களாக ரூபா 30,000 வரை வழங்கப்படும். மேலும் வைத்தியசாலை அல்லது மருத்துவ விடுதிகளில் உள்ள விஷேட வைத்திய நிபுணர்களின் பரிந்துரையின் கீழ் விஷேட சிகிச்சை வழங்கப்படுமிடத்து ரூபா 50,000 வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். அத்துடன் மருத்துவ ஆலோசனை சிகிச்சைகளுக்கும் ரூபா 20,000.00 வரை வழங்கப்படும். சுதேச வைத்திய அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் ஆயுள்வேத வைத்திய சாலைகளில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெறும் சந்தர்ப்பத்தில் ரூபா 12,000 கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகையில் மருத்துவக் கட்டணமாக ரூபா 5000.00, நாளொன்றுக்கு ரூபா 500.00 மருத்துவ பரிசோதனைகளுக்கு உச்சப்பெறுமதியாக ரூபா 20,000.00உம் வழங்கப்படும். இதய அறுவைச் சிகிச்சைக்கு உச்சப் பெறுமதியாக ரூபா 500,000.00, புற்றுநோய் மற்றும் சிறுநீரகம் தொடர்பான சிகிச்சைக்கு ரூபா 200,000.00 வரையும் கொடுப்பனவு செய்யப்படும். கேட்டல் உபகரணம் பெறுவதற்கு ரூபா 200,000.00 வரை வழங்கப்படுகின்றது.

2016ஆம் ஆண்டு ஓய்வூதியத் திணைக்களத்தால் குறிப்பிடத்தக்க சாதனையாக ஓய்வூதியர்களுக்கு தேசிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் கேட்டல் உபகரணங்களிற்கு ரூபா 50,000.00, இயற்கை மரணத்திற்கு ரூபா 15,000.00, விபத்தின் மூலமான மரணத்திற்கு ரூபா 600,000.00 வழங்கப்பட்டுள்ளது.

### 9.5. தனியார் நிறுவனங்களை இணைத்தல்

ஓய்வூதியர்களது சமூகப் பொருளாதாரத்தை உயர்த்தி அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அப்பால் குறிப்பிட்ட திகதியில் மாதாந்த ஓய்வூதியத்தை வழங்குவது ஓய்வூதியத் திணைக்கள அலுவலர்களின் பொறுப்பாகும்.

தேசிய பொறுப்பாக, ஓய்வூதியர்களைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும் பொழுது அரச நிறுவனங்கள் எனும் கட்டுப்பாட்டிற்குள் திணைக்களம் இருப்பது குறிப்பிட்ட எல்லைகள் மற்றும் சிரமங்களை எதிர்நோக்குகிறது. இதனால்

தனியார்துறைப் பங்களிப்பு அவசியமாகிறது. தனியார் துறையுடன் உறுதியான உறவு உள்ளமையால் பல வெற்றிகளைப் பெற முடிந்துள்ளது. ஓய்வூதியத் திணைக்களம் தனியார் துறையினருடன் செய்த ஒப்பந்தங்களின் விளைவாக ஓய்வூதியர்களுக்கு நியாயமான விலையில் பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படுகின்றன. ஓய்வூதிய வயதை அடைகையில் வழிபாட்டுத்தலங்களுக்குச் சென்று வழிபடும் கனவு ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் எழும். இக்கனவை நனவாக்கும் நோக்குடன் மிஹின் எயார் விமான சேவையுடன் ஓய்வூதியத் திணைக்களம் செய்த ஒப்பந்தத்தின்படி இலகு கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டு இந்தியாவின் வேளாங்கன்னி, மக்கா ஆகிய இடங்களிற்கு தலயாத்திரை செய்யும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தலயாத்திரையில் இணையும் பக்தர்களின் நலன் கருதி அவர்களது பயணச் சீட்டுக் கட்டணத்தை ஓய்வூதியத்திலிருந்து தவணை முறையில் கழிப்பனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல தனியார் மருத்துவமனைகள் ஓய்வூதியர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற தள்ளுபடிக் கட்டணங்களை வழங்கியுள்ளது. மேலும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் இலத்திரனியல் அடையாள அட்டை மூலம் பல நன்மைகள் கிடைக்கப்பெறும். “ஏசியன் அலையன்ஸ்” மற்றும் “பெயர் பெஸ்ட்” ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் “புஹுமன் காப்புறுதி” திட்டத்தின் கீழ் பல நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன. மேற்கூறப்பட்ட காப்புறுதி 75 வயது வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் 90 வயது வரை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏசியன் அலையன்ஸ் மற்றும் பெயர் பெஸ்ட் ஆகிய நிறுவனங்களைத் தொடர்ந்து வேறு காப்புறுதி நிறுவனங்களும் தமது நன்மைகள் தொடர்பான கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளன.

ஓய்வூதியர்களின் பொருளாதாரத்தைத் தரமுயர்த்தும் நோக்குடன் அவர்களை கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்ய ஆர்வம் ஊட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் பான் ஏசியா, எல்.பி. பினான்ஸ் மற்றும் சனச நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டது. மேலும் பல்வேறுபட்ட தொலைத் தொடர்பு நிறுவனங்களால் விலைக்கழிவுடனான விஷேட தொலைபேசித் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர்களை தொழிற்படைக்கு மீண்டும் அறிமுகப்படுத்தும் நோக்கில் “திவி அருண” எனும் திட்டம் காணப்படுகிறது. மேலும் ஓய்வூதியர்களது தகைமைக்கேற்ப பல தனியார் நிறுவனங்கள் பொருத்தமான

பதவிகளுக்கு அவர்களை உள்வாங்குகின்றன.

2016இல் ஓய்வூதியத் திணைக்களம் அடைந்த குறிப்பிடத்தக்க வெற்றிகளில் ஓய்வூதியர்கள் தனியார் துறையுடன் இணைந்து பல நன்மைகளைப் பெறுவதுடன் அவர்களது நம்பிக்கையை வென்றெடுத்தமை ஒன்றாகும்.

**9.6. ரம்பொட மற்றும் களனி ஓய்வு விடுதிகளை நவீனமயமாக்கல்.**

ஓய்வூதியர்கள் சமூக, பொருளாதார ரீதியாக திருப்தியடைவதன் ஊடாக பல நன்மைகளை் பெற்று திருப்திகரமான ஓர் ஓய்வூதிய சமூகத்தைக் கட்டியெழுப்பும் தொலைநோக்கிற்கு அப்பால் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்குவதே முதன்மைக் கடமையாகும். ஓய்வூதியர் தனது ஓய்வூதியக் காலத்தில் அவர்களுக்கு ஆரோக்கியமானதும் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் களனி மற்றும் ரம்பொட ஓய்வு விடுதிகள் அமைக்கப்பட்டன. களனி - வெதமுல்ல ஓய்வு விடுதி கொழும்பு கண்டி நெடுஞ்சாலைக்கு அண்மையில் அமைந்துள்ளதுடன் வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு கொழும்பிற்கு வருகை தரும் ஓய்வூதியர்கள் தங்கிச் செல்ல வாய்ப்புக் கிடைப்பதுடன் ஓய்வு நேரத்தை செலவிடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

களனி - வெதமுல்ல ஓய்வு விடுதியானது அபிவிருத்தி செய்யப்பட்ட கேட்போர் கூடத்தைக் கொண்டுள்ளதுடன் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கவரும் வகையில் கருத்தரங்கு நடாத்தும் வசதிகளுடன் சொகுசு அறைகளையும் கொண்டுள்ளது.இங்குள்ள உல்லாச விடுதியை அபிவிருத்தி செய்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தால் அவதானம் செலுத்தப்படுகிறது.



மூலம் - ஊடகப் பிரிவு

களனி - வெதமுல்ல விடுதியில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன இரண்டு சொகுசு அறைகள் கட்டப்பட்டுள்ளதுடன் அவற்றிற்கான நீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஓய்வூதிய சமுதாயத்தின் உச்ச திருப்தியைக் கருத்தில் கொண்டு களனி வெதமுல்லையை அணுகும் வரையான மின்விளக்குத் தொகுதியை நிறுவுவதற்கு ஓய்வூதியத் திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.






மூலம் - ஊடகப் பிரிவு

ரம்பொட ஓய்வு விடுதி ரம்பொட நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இது சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளதுடன் ஓய்வூதியத் திணைக்களத்தால் ஓய்வூதிய சமுதாயத்திற்கு உயர்ந்த தரத்துடன் வழங்கப்படுகிறது. இது தன்னகத்தே சிறந்த கவர்ச்சிகரமான சூழலைக் கொண்டுள்ளமையால் ஓய்விற்கு ஏற்ற இடமாக ஓய்வூதியர்களிடையே புகழ் பெற்றுள்ளமையால் ரம்பொட ஓய்வு விடுதிக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. சுற்றுலா வலயத்தில் ஓய்வு விடுதியை அமைத்ததன் மூலம் தேசிய பொருளாதாரத்தில் உயர் வருவாய் பங்களிப்பை வழங்கும் அரச நிறுவனமாக ஏனைய நிறுவனங்களிற்கு முன்னுதாரணமாக ஓய்வூதியத் திணைக்களம் திகழ்கின்றது.

## 9.7. ஓய்வூதிய இணைய சஞ்சிகை

ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு வரையறை இல்லாது ஓய்வூதியரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கருத்துள்ளதாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு திணைக்களம் ஆகும். இது 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 08ஆம் திகதி தேசிய ஓய்வூதியர் தினக் கொண்டாட்டத்திற்கு 2015 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாதாந்த ஓய்வூதியப் பத்திரிகையை 2016ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்தின் 8ஆம் திகதியும் இணையத்தளத்தில் வெளியீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தது. மூத்தபிரஜைகளின் அனுபவம் மற்றும் அறிவு ஆகியவற்றை சமூகமயமாக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் பொழுது போக்கு, கல்வி சார் தகவல்கள், சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகியவற்றை இணைப்பதன் மூலம் ஓய்வூதியர் சமுதாயத்திற்கு ஓர் பொருத்தமான வழிகாட்டியாக உள்ள இவ்வலைத்தளப் பத்திரிகை ஓர் பத்திரிகையாகத் தொழிற்படுகின்றது.

ஓய்வூதியர்கள் மற்றும் பொருத்தமான துறைசார் அரச நிபுணர்கள் ஆகியோருக்கு ஓய்வூதிய வலைத்தளப் பத்திரிகை கல்வி புகட்ட தொகுக்கப்பட்ட அம்சங்கள் வசதி செய்வதுடன் அப்பத்திரிகை பெரும் எண்ணிக்கையான நேர்மறைக் கருத்துக்களை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச அலுவலர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டது.

மாதாந்த ஓய்வூதியப் பத்திரிகை நாளாந்தம் புதுப்பிக்கப்படும். சம்பந்தப்பட்ட தகவல்கள் தொடர்பில் ஓய்வூதியர்கள் ஆர்வம் கொள்வதுடன் ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தை இணைக்கும் தொடர்பாடல் ஊடகமாகவும் முக்கி பங்கை வகிக்கிறது. மேலும் கூறப்பட்ட பத்திரிகை பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தற்பொருட்டு ஓய்வூதியத் திணைக்களத்தின் முகநூல் கணக்கிலும் வெளியிடப்படுவதுடன் இப்பத்திரிகை வாசிப்பதற்கு தூண்டப்படுகிறது.




மூலம் – ஊடகப் பிரிவு

## 9.8 ஓய்வூதியர்களுக்கான வானொலி சேவை

பல திறமைகளைக் கொண்ட வேறுபட்ட துறைகளில் ஈடுபட்டுள்ள ஓய்வூதியர்களது அறிவை சமூகமயமாக்கும் நோக்குடன் 2015 ஒக்டோபர் 08ஆந் திகதி தேசிய ஓய்வூதிய தினக் கொண்டாட்டத்தன்று வலைத்தள வானொலி ஆரம்பிக்கப்பட்டது.



மூலம் – ஊடகப் பிரிவு

ஓய்வு பெறும் வயதில் திட்டமிடப்பட்ட சமூக வாழ்க்கைக்குள் அவர்கள் அமிழ்வதை விடுத்து அவர்களது வேறுபட்ட திறமைகள் மற்றும் திறன்களை வெளிக் கொண்டு அமைக்கப்படும் மேடையாகும். ஓய்வூதியத் தகவல்களுடன் புதுப்பிக்கப்பட்ட மற்றும் திருப்திகரமான ஓய்வூதிய சமூகத்தை உரிவாக்கும் பொருட்டு ஓய்வூதியத் தகவல்களை புதுப்பிப்பதுடன் பொழுது போக்கு, பொருளாதாரம், சுகாதாரம்

ஆகியவற்றைக் கொண்ட நிகழ்ச்சி இதுவாகும்.

ஓய்வு பெற்ற அலுவலர்கள், கல்வியாளர்கள் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றியோர் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அறிவிப்பாளர்களாவதுடன் இம்மனித வளத்துடன் தரமான வானொலி சேவையாக ஓய்வூதியத் திணைக்களத்தால் வலைத்தள சேவை இனங்காணப்பட்டது.

2016இல் ஓய்வூதியத் திணைக்களத்தால் அடைந்த அடைவுகள் தொடர்பில் திணைக்களத்தில் கடமையாற்றும் அலுவலர்களின் பிள்ளைகள், சட்டவாக்க அலுவலர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கு ஓய்வூதிய வானொலி மூலம் வணபிதா, வைத்தியர்கள், ஆசிரியர்கள் மற்றும் இலங்கை நிர்வாக சேவை அலுலவர்கள் போன்ற வேறுபட்ட தொழில் புரிவோர் தன்னிறைவு முன்னிலைப்படுத்துகைகளை சமர்ப்பிக்கின்றனர்.




மூலம் – ஊடகப் பிரிவு

# 10. மனித வள முகாமைத்துவம்

## 10.1. உள்ளகப் பயிற்சி நெறிகள்

